பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு 2028 கார்த்திகை 30 திங்கட்கிழமை 15-12-1997 UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 17

அரசியல்வாதியின் வீட்டில் ஈழத்தமிழர் ஆதரவு மாநாடு

ஜோர்ஜ் பெர்னாண்டஸும் பங்கு

புதுடில்லி டிச. 15

சர்வதேச தமிழர் சம்மேளனம் புதுடில்லியில் ஏற்பாடு செய்திருந்த ஈழத்தமிழர் ஆதரவு மாநாடு திட்டமிட்டபடி அரசியல்வாதி ஒருவரின் வீட்டில் நடைபெற்றது. இம்மாநாடு நடைபெறுவதற்கு இந்திய பொலீஸாரால் தடைவிதிக்கப்பட்டது தெரிந்ததே.

மாநாட்டில் இந்திய அரசியல்வாதிகளுடன் அமெரிக்கா, பிரான்ஸ் உட்பட உலக நாடுகளிலிருந்து பல பிரதிநிதிகள் வந்து கலந்து கொண்டனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

பாதுகாப்பு அமைச்சு விசாரணை குழு விரைவில் அறிக்கை சமர்ப்பிக்கும்

இறுதிக்கட்ட விசாரணை நேற்று யாழ். செயலகத்தில்

யாழ்ப்பாணம், டிச. 15

குடாநாட்டில் காணாமற் போனோர் தொடர்பாக விசாரணை நடத்திவரும் பாதுகாப்பு அமைச்சின் விசாரணைக் குழு விரைவில் தனது அறிக்கையை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கவிருக்கிறது.

பந்துல குலதுங்க தலைமையிலான இக்குழு நேற்று யாழ். செயலகத்தில் தனது இறுதிக்கட்ட விசாரணையை முடித்துத் திரும்புகையிலேயே மேற்கண்ட தகவலை வெளியிட்டது.

தகவல் தெரியாதுள்ளவர்களின் பாதுகாவலர், பெற்றோர் விசாரணைக் குழு உறுப்பினர்களிடம் அழுது புலம்பித் தமது பிள்ளைகள் குறித்த தகவலை வெளியிடு

(10 ஆம் பக்கம் பார்க்க)

உண்ணாவிரதத்தைக் கைவிட மறுக்கின்றனர் தமிழ்கைதிகள்

சிறைச்சாலை அதிகாரிகளின் முயற்சி தோல்வி

கொழும்பு, டிசம்பர் 15

களுத்துறைச் சிறைச்சாலையில் கடந்த வெள்ளிக்கிழமை தமிழ்க் கைதிகள் சிங்களக் கைதிகளால் தாக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து 460 தமிழ்க் கைதிகள் ஆரம்பித்துள்ள உண்ணாவிரதப் போராட்டத்தை நிறுத்த நேற்று எடுக்கப்பட்ட முயற்சிகள் பயன் அளிக்கவில்லை.

சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் கரலியத்த, பிரதி ஆணையாளர் எஸ். பாஸ்கரலிங்கம், சட்டமா அதிபர் திணைக்களத்தில் தடுப்பு உத்தரவுக்கு பொறுப்பான சிரேஷ்ட அரச சட்டத்தரணி கமலத் கமகே ஆகியோர் நேற்று உண்ணாவிரதிகளுடன் நடத்திய பேச்சுக்களின் போது, தமது கோரிக்கை நிறைவேறாத வரை உண்ணாவிரதம் கைவிடப்படமாட்டாது என்று அவர்கள் உறுதிபடக் கூறிவிட்டனர்.

உண்ணாவிரதிகளின் கோரிக்கைகளுக்கு தாம்எதிர் வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர்பதில் வழங்குவதாக

(10 ஆம் பக்கம் பார்க்க)

சந்திரிகா நாடு திரும்பினார்

கொழும்பு, டிச. 15

தனிப்பட்ட விஜயம் மேற்கொண்டு லண்டன் சென்றிருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று முன்தினம் காலை நாடு திரும்பினார்.

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த ஜனாதிபதிக்கு ஆட்லறி றெஜிமெண்ட் விசேட பாதுகாப்பு வழங்கியது.

(இ-3)

கூட்டணியின் தலைமை வேட்பாளர்

கொழும்பு, டிச. 15

யாழ். மாநகர சபையின் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமை வேட்பாளராக முன்னாள் யாழ். நாடாளுமன்ற உறுப்பினர் வெ.

(10 ஆம் பக்கம் பார்க்க)

சடலங்களை எடுத்துச் செல்வதற்கு அனுமதி கோரி நீதிமன்றில் மனு

கொழும்பு, டிச. 15

களுத்துறைச் சிறைச்சாலை தாக்குதல்சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களின் சடலங்களைச் சொந்த இடங்களுக்கு எடுத்துச் செல்ல அனுமதி கோரி இன்று களுத்துறை நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்படும்,

நேற்று முன்தினம் மரண விசாரணைகள் நடைபெற்ற போது பதில் நீதிபதி பந்துல வீரசிங்க சடலங்களைசொந்த இடங்களுக்கு எடுத்துச்செல்ல அனுமதிக்கவில்லை.

மனித கௌரவத்துக்கான அமைப்புச் செயலாளர் சட்டத்தரணி மகேஸ்வரி வேலாயுதம் இம் மனுவைத் தாக்கல் செய்யவிருக்கின்றார்.

நீதிமன்றம் அனுமதிவழங்குமானால் யாழ். மாவட்டவாசிகளின் சடலங்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகளை ஈ. பி. டி. பி. மேற்கொள்ளும்.

களுத்துறை தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

★ கிருஷ்ணபிள்ளை சிறிமோகன் — கொக்குவில்.

★ ஜீவானந்தன் திவாகரன் — கிரான்.

★ செல்லத்துரை கருணாகரன் — கொடிகாமம்.

★ வெற்றிவேல் திருச்செல்வம் — கொக்கட்டிச்சோலை.

★ இராசதுரை கோபால

(10 ஆம் பக்கம் பார்க்க)

உண்ணாவிரதம் குறித்து சிறைச்சாலையில் கூட்டம்

தமிழ்க் கட்சிகளும் கலந்து கொண்டன

கொழும்பு, டிச. 15

களுத்துறை சிறைச்சாலையில் தமிழ்க்கைதிகள் மேற்கொண்டுள்ள உண்ணாவிரதம் குறித்து ஆராய நேற்றுக் காலை களுத்துறைச்சிறைச்சாலையில் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

சிறைச்சாலை ஆணையாளர் கரலியத்த தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்களான பொ. செல்வராசா, சி. துரைராஜசிங்கம், புளொட் அமைப்பின் தலைவர் த. சித்தார்த்தன், ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் எம். சந்திரகுமார்,

(10 ஆம் பக்கம் பார்க்க)

மோட்டார் சைக்கிளில் குண்டு!

அம்பாறை, டிச. 15

கல்முனை பொலீஸ் நிலையத்துக்கு அருகில் நேற்றுக் காலை 8.30 மணி அளவில் மோட்டார் சைக்கிளில் பொருத்தப்பட்டிருந்த குண்டு ஒன்று மீட்கப்பட்டு செயல் இழக்கச் செய்யப்பட்டது.

நேற்று முன்தினம் ஒரு கடைக்கு வந்த இனந்தெரியாத

(10 ஆம் பக்கம் பார்க்க)

வள்ளங்கள் மீது பெற்றோல் குண்டு வீச்சு!

மட்டக்களப்பு, டிச. 15

மட்டக்களப்பு, காத்தான்குடியில் நேற்று முன்தினம் இரவு இனந் தெரியாத நபர்களினால் மீனவர்களின் வள்ளங்கள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் மீது பெற்றோல் குண்டு வீசப்பட்டுள்ளது.

இதனால் இரு மீன்பிடி வள்ளங்களும் வலைகளும் எரிந்து நாசமாகின.

(இ-21)

யாழ். உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதா? இல்லையா?

பொ. ஐ. முன்னணி இன்று ஆராயும்

கொழும்பு, டிச. 15

யாழ். மாவட்டத்தில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணி இன்று கூடி ஆராயவிருக்கிறது.

சில தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடுவது தொடர்பாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணி கடந்த வெள்ளிக்கிழமை கூடி ஆராய்ந்ததாகவும் —

ஜனாதிபதி நாடு திரும்பிய

(10 ஆம் பக்கம் பார்க்க)

காணாமற்போன படையினரின் உறவினர் சங்கம்அமைத்தனர்

கொழும்பு, டிச. 15

காணாமற் போன படையினரின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் ''பாதுகாப்புப் படையிலிருந்து காணாமற் போனவர்கள் சங்கம்'' என்ற பெயரில் புதிய சங்கமொன்றை ஆரம்பித்துள்ளனர்.

காணாமற்போன படையினர் தொடர்பாக விடுதலைப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

இராணுவ தலைமையில் விரைவில் மாற்றங்கள்

கொழும்பு, டிச. 15

இராணுவத் தலைமையில் சில மாற்றங்கள் விரைவில் செய்யப்படவிருப்பதாக கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

இராணுவ அதிகாரிகள் பலர் வெளிநாட்டில் பயிற்சி பெற்றுத் திரும்பியுள்ளதையடுத்தே இந்த மாற்றங்கள் செய்யப்படவிருக்கின்றன.

அமெரிக்க தேசிய படைக்கல்லூரியில் பயிற்சி பெறுவதற்காகச் சென்றிருந்த மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவும் —

இந்திய படைக்கல்லூரியில் பயிற்சி பெறுவதற்காகச் சென்றிருந்த மேஜர் ஜெனரல் நீல் டயஸ், பிரிகேடியர் லொகான் குணவர்த்தன ஆகியோரும் — நாடு திரும்புவதால் புதிய மாற்றங்கள் மேற்கொள்ளப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மரண அறிவித்தல்கள்

கந்தையா அருணாசலம்

(முன்னாள் உப-அதிபர் யா / நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி)

சிறுப்பிட்டி தெற்கைச் சேர்ந்த கந்தையா அருணாசலம் 13 - 12 - 1997 அன்று காலமானார்.

இவர் தங்கம்மாவின் அன்புக் கணவரும், திரு. அ. தம்பிப்பிள்ளை (Inservice Adviser (English) வாழைச்சேனை), மனோரஞ்சிதம் (Bethesda, U. S. A.), தேவரஞ்சிதம் (ஆசிரியை, யா / ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற Dr. K கனகரத்தினம் (சிரேஷ்ட ஆலோசகர் (Family Planning & Nutrition, World Bank U. S. A.), திரு. வே. பரிமேலழகப் பிள்ளை (ஆசிரியர், யா / ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்) ஆகியோரின் அன்பு மாமனும், பொப்சி கனகரத்தினம் (U. S. A.), ரீனா கனகரத்தினம் (Shangai, China), ப. கார்த்திகேயன் (வைத்தியக் கல்லூரி மாணவர், லுமும்பா பல்கலைக்கழகம் றியூலா வளாகம்), ப. கோபி கிருஷ்ணா (மாணவர், யா/ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, புத்தூர், (வர்த்தகம் 98 பிரிவு) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே. பரிமேலழகப்பிள்ளை
(மருமகன்)

சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.

(51847)

திருமதி பாலேந்திரன் ஆச்சிப்பிள்ளை

சுன்னாகத்தைச் சொந்த இடமாகவும் கந்தர் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலேந்திரன் ஆச்சிப்பிள்ளை (மேசி) 14-12-97 அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்துள்ளார்.

இவர் பாலேந்திரன் (ஓய்வு பெற்ற நீர்ப்பாசன மேற்பார்வையாளர், கனடா) அவர்களின் அன்புமனைவியும், திருமதி ஷைலக்குமாரி கருணாநிதியின் (அரசினர் வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) அன்புத் தாயாரும், நாகலிங்கம் கருணாநிதியின் அன்பு மாமியாரும், விஜிதா (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) அருட்குகன் (மத்தியகல்லூரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற சரசுப்பிள்ளை மற்றும் குட்டிப்பிள்ளை, பூமணி ஆகியோரின் சகோதரியும், வல்லிபுரம், கிருபாகரனின் மைத்துனியும், மைக்கல் கயேந்திரனின் (அரசினர் வைத்தியசாலை) வளர்ப்புத்தாயாரும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை 15-12-97 இன்று திங்கட்கிழமை மாலை 3-00 மணிக்கு இல. 56, பழம் றோட், கந்தர்மடத்தில் நடாத்தப்பட்டு பூதவுடல் நல்லடக்கத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. ஷைலக்குமாரி

இல. 56, பழம் றோட்,
கந்தர்மடம்.

(51849)

கணேசலிங்கம் மயூரன்

(மாணவன், யாழ். இந்துக்கல்லூரி க. பொ. த. உயர்தரம்—1996)

கைதடி தென்கிழக்கைச் சேர்ந்தவரும், யாழ். இந்துக்கல்லூரி க. பொ. த. உயர்தர (1996) மாணவனுமாகிய கணேசலிங்கம் மயூரன் அவர்கள் 1997 டிசம்பர் 13 ஆம் திகதி அகால மரணமாகி விட்டார்.

இவர் புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும், கைதடியை வசிப்பிடமாகவும் கொண்ட Dr. விநாயகமூர்த்தி கணேசலிங்கத்தினதும் கைதடி ஆயுர்வேத நாயகியினதும் அன்புப் புதல்வனும், எலிதாவின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 1997 டிசம்பர் 14 ஆம் திகதி கைதடியில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
Dr. வி. கணேசலிங்கம்
(தந்தை)

மணியகாரர் வளவு,
கைதடி.

(51852)

மூத்தாம்பி கனகம்மா

சங்கானையைப் பிறப்பிடமாகக் கொண்ட மூத்தாம்பி கனகம்மா நேற்று (14-12-97) காலமானார்.

அன்னார் மூத்தாம்பியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற உதயச்சந்திரன் மற்றும் ஜெயச்சந்திரன் (உதயா பேக்கரி, சங்கானை), ரவிச்சந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் தாயாரும், துரைராஜா, ராசரட்ணம், பொன்னம்மா, காலஞ்சென்ற ராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், தேவராணி, திலககுமாரி, லதா ஆகியோரின் மாமியாரும், தேவகுமார், கரிஸ்குமார், ஜரிசா, ராஜகுமார், மதுஜா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15-12-97) திங்கட்கிழமை காலை 10-00 மணியவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஜெயச்சந்திரன்
(மகன்)

உதயா பேக்கரி,
சங்கானை.

(51845)

யாழ்ப்பாணம் - முல்லைத்தீவு இணைப்பதற்கு இரகசியப் பாதை!

புலிகள் அமைக்கின்றனராம்

கொழும்பு, டிச. 15

முல்லைத் தீவில் இருந்து யாழ்ப் பாணத் துக்கு விடுதலைப் புலிகள் இரகசியப் பாதை ஒன்றை அமைத்துவருகிறார்கள் என பாதுகாப்புப் பிரிவினருக்குத் தகவல் கிடைத்துள்ளதாம்.

இந்த இரகசியப் பாதை இரணைமடுவுக்கு வடக்கே யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைப் பிரிக்கும் முன்னைய எல்லைக்கு அண்மையில் அமைக்கப்படுவதாக ''திவயின'' சிங்கள நாளிதழ் தெரிவித்திருக்கிறது.

வவுனியா — யாழ்ப்பாணம் நெடுஞ்சாலை முற்றிலுமாக இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் சென்றடைய நேரிடின் ஆனையிறவுக்கும் முல்லைத் தீவுக்கும் இடையில் போக்குவரத்தை மேற்கொள்வதற்காகவே விடுதலைப் புலிகள் இந்த இரகசிய பாதையை அமைத்துவருகிறார்கள் என பாதுகாப்பு வட்டாரங்கள் நம்புகின்றனவாம்.

படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தற்போது நடைபெற்றுவரும் சண்டைகளில் விடுதலைப் புலிகள் ஆட்லறிகளைப் பயன்படுத்துவதாகவும் எனவே அந்த ஆட்லறிகளை இடம்மாற்றுவதற்கு இந்தப் பாதையைப் பயன்படுத்துவதே புலிகளின் நோக்கம் எனவும் அந்தப் பத்திரிகை மேலும் தெரிவிக்கிறது.

புலிகள் அமைக்கும் இந்த இரகசியப்பாதை வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் பாதையாக அமையும் என்பதால் அது பாதுகாப்புப் படையினருக்கு கடும் அச்சுறுத்தலாக அமையும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

சமய அரங்கிலிருந்து

கொழும்புத்துறை, டிச. 15

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் கார்த்திகை சோமவாரத்தை முன்னிட்டு இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு விசேட அபிஷேகமும், பூசையும் இடம் பெறும். (இ-30)

* * *

தொல்புரம் வழக்கம்பரை அருள் மிகு ஸ்ரீ மகாமாரி அம்பாள் ஆலயத்தில் ''காசி காண்ட புராணப் படிப்பு'' பூர்த்தி நிகழ்வும் கடைசி கார்த்திகை சோமவார விசேட அபிஷேகமும் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளன. (இ-30)

தராசுகளுக்கு முத்திரையிடும் பணி

தென்மராட்சி, டிச. 15

பிளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வர்த்தக வியாபார நிலையங்களின் அளவை, நிறுவை உபகரணங்களுக்கு முத்திரையிடும் பணிகள பிரதேச செயலகத்தில் நடைபெற்றுவருகின்றன.

முத்திரையிடும் வேலைகள் நாளை செவ்வாய்க்கிழமையுடன் முடிவடைவதால் இப் பகுதியின் உள்ள வர்த்தகர்கள், வியாபாரிகள் தமது அளவை, நிறுவை உபகரணங்களுக்கு முத்திரையிடுமாறுயாழ்.செயலக அளவை, நிறுவை பரிசோதகர் எவ. கிருஷ்ணதாசன் அறிவித்துள்ளார். (இ-117)

Institute of Nursery Studies

Moolai, Chulipuram,

மீண்டும் ஆரம்பமாகவுள்ளது

மெருகூட்டிய பாடத்திட்டம்

சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி

6 மாதம் — சனி, ஞாயிறு, விடுதலை நாள்கள் சான்றிதழ் வழங்கப்படும்.

உபகரணமாக்கல் பயிற்சி

6 நாள்கள்

சிறுவர் கல்வியின் முன்னேற்றம்

2 நாள்கள்

ஆரம்பம்: 03-01-1998

27 - 12 - 1997 இற்கு முன் பதிவுசெய்யவும்.

814, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(51848)

07—12—1997 இல் நடைபெற்ற

(7) புலமைப் பரிசில் - 1997

முதன்மைப் புள்ளி பெற்றவர்கள்

1) செல்வி ஜனனி அருணாசலம் 175 புள்ளி
யா/ஜ. ச. சைவ. வி. சுழிபுரம்.

2) செல்வன் டில்சான் குலதாஸ் — 174 புள்ளி
யா/உடுவில் ம. க.

3) செல்வன் நவராஜகுமரன் நவரத்தினம் — 173 புள்ளி யா/இந்து ஆ. பா.

4) செல்வி சாருஜா கருணாகரன் — 170 புள்ளி
யா/நடராச. இ. வி. ஆவரங்கால்.

5) செல்வன் சிவமைந்தன் சிவகுமார் — 169 புள்ளி
யா/பரியோவான் கல்லூரி.

6) செல்வன் முகிலன் காந்தரூபன் — 169 புள்ளி
யா/உடுவில் ம. கல்லூரி.

இவர்களை வாழ்த்துகின்றோம்

அடுத்த பரீட்சை: 21-12-1997 காலை 8-30 மணி

விவரங்களுக்கு: BOND

(51846) — பதிவாளர்

ஆங்கில வினாத்தாள்

பெற்றுக்கொள்ளவும்

BOND

யாழ்ப்பாணம்.

(51844)

முக்கிய அறிவித்தல்

இம்மாத இறுதியில் நடைபெற இருக்கும்

G. A. Q. 97

(வெளிவாரி யாழ். பல்கலைக்கழகம்)

தேர்விற்கு தோற்ற இருக்கும் மாணவர்கள் எதிர் வரும் வியாழன் 18 - 12 - 1997 அன்று காலை 8-30 மணிக்கு வருகை தரவும்.

எஸ். அருள்நங்கை

புதிய உயர் கல்லூரி

அதிபர் சந்தி, யாழ்.

(51843)

கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்க சங்கிராணை இளையின் பொருளாளர்

திரு. மு. ஜெயச்சந்திரன்

அவர்களின் அருமைத் தாயார்

திருமதி மூத்தாம்பி கனகம்மா

அவர்களின் திடீர் மறைவையிட்டு அவரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், அங்கத்தவர்கள்
சங்கானை, சண்டிலிப்பாய் இளை யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்.

(51851)

கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர்

திரு. அ. ஸ்ரனிஸ்லோஸ்

அவர்களின் அருமைத் தந்தையாரான

சவரிமுத்து அந்திரேசுப்பிள்ளை

அவர்கள் 12-12-97 இல் இறைபதம் அடைந்துவிட்டார். அவரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா / மானிப்பாய் இந்துக் கல்லூரி.

(51850)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் வேடம் அணிந்து ஐ. ஆர். ஏ. கைதி தப்பினார்

பெல்பெஸ்ட், டிச. 15

ஐரிஸ் விடுதலை இராணுவத்தின் கெரில்லா இயக்க உறுப்பினர் ஒருவர் வட அயர்லாந்து சிறைச்சாலை ஒன்றில் இருந்து தப்பிவிட்டதாக பிரிட்டிஷ் அரசு அறிவித்துள்ளது.

உயர்பாதுகாப்பு அளிக்கப் பட்டிருந்த அந்த சிறைச் சாலையில் இடம் பெற்ற கிறிஸ்மஸ் நிகழ்ச்சி ஒன்றுக்கு வருகை தந்திருந்த பெண் விருந்தினர் ஒருவரின் உடையை அணிந்து கொண்டு இந்தக் கைதி தப்பியிருக்கலாம் என்று அரச அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக விசாரணைகள் நடைபெறுகின்றன.

கடந்த மாதம் ஐ. ஆர். ஏ. கைதிகள் தடுத்து வைக்கப் பட்டிருந்த சிறைக்கூடத்தில் நிலத்துக்கு அடியே சுரங்கம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து சிறைச்சாலை பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருந்தன.

(ஐ)

ஓய்வு பெறுகின்றார் மண்டேலா

ஜோஹனர்ஸ்பேர்க், டிச. 15

தென்னாபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலா (வயது 79) அடுத்த வாரம் பதவியில் இருந்து ஓய்வு பெறவுள்ளார்.

ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் தலைவர் என்ற ரீதியில் அவர் ஆற்றும் கடைசி பிரியாவிடை உரை நாளை செவ்வாய்க் கிழமை நடைபெறும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் தேசிய மாநாட்டில் இடம் பெறும்.

6 தசாப்த காலம் நீடித்த அவரது அரசியல் வாழ்க்கை இதனுடன் முடிவுக்கு வரும். 20 ஆம் நூற்றாண்டில் மக்களால் மிகவும் நேசிக்கப்பட்ட தலைவரான நெல்சன் மண்டேலா தென்னாபிரிக்க நிறவெறி அரசால் 25 ஆண்டுகாலம் சிறை வைக்கப்பட்டிருந்தார்.

நெல்சன் மண்டேலா பதவி விலகியதும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் அடுத்த தலைவருக்கான வேட்பாளராக தற்போதைய உப ஜனாதிபதி தபோ பெக்கி ஏகமனதாகத் தெரிவு செய்யப்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜெயினுக்கு கொலை மிரட்டல்! பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டது!!

புதுடில்லி, டிச. 15

ராஜீவ்காந்தி கொலையின் பின்னணியில் உள்ள சதித் திட்டங்கள் தொடர்பாக விசாரணை நடத்தி அண்மையில் இடைக்கால அறிக்கையை வெளியிட்ட நீதிபதி ஜெயினுக்கு கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கிறது.

இதனை அடுத்து நீதிபதி ஜெயினின் பாதுகாப்பு பலப் படுத்தப்பட்டிருக்கிறது.

நீதிபதி ஜெயின் வெளியிட்ட அறிக்கையைத் தொடர்ந்து எழுந்த சர்ச்சைகளால் இந்தியாவின் ஐக்கிய முன்னணி அரசு பதவி அவிழ்ந்தது தெரிந்ததே.

(ஐ)

உலக அரங்கில்

போதைப்பொருள் அருந்திய நிலையில் பள்ளி மாணவர்கள்

தாய்லாந்தில் திடீர்ச் சோதனை

பாங்கொக், டிச. 15

தாய்லாந்தில் பாடசாலைகளில் நடத்தப்பட்ட சோதனைகளின் போது ஆயிரக்கணக்கான மாணவர்கள் போதைப் பொருள்களை உட்கொண்டிருந்தது தெரிய வந்துள்ளது.

போதைப் பொருள் ஒழிப்புத் திட்டத்தின் கீழ் கல்வி அமைச்சு இந்த சோதனைகளை நடத்தியதாக 'த நேஷன்' என்ற நாளிதழ் தெரிவித்துள்ளது.

போதைப் பொருள் அருந்தியதாகக் கண்டறியப்பட்ட மாணவர்களில் ஆரம்பக் கல்வி மாணவர்கள் நூறுபேரும் அடங்குவர்

(ஐ)

பிளயர்-ஜொ அடம்ஸ் செவ்வாயன்று சந்திப்பு

லண்டன், டிச. 15

ஐ. ஆர். ஏ. அரசியல் பிரிவுத் தலைவர் ஜெரி அடம்ஸும், பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயரும் கடந்த செவ்வாயன்று சந்தித்தனர்.

கடந்த 76 ஆண்டுகளில் பிரிட்டிஷ் பிரதமரை அவரது டவுனிங் தெரு 10 ஆம் இலக்க வாசஸ்தலத்தில் சந்தித்துப் பேசிய முதவாவது ஐரிஸ் குடியரசுத் தலைவர் ஜெரி அடம்ஸே ஆவார்.

இவர்களது சந்திப்பு ஒரு மணி நேரம் இடம்பெற்றது.

1921 ஆம் ஆண்டு அப்போதைய பிரிட்ஷஷ் பிரதமர் லொயிட் ஜோன்ஸ்ஸுக்கும் மல்கேல் கொலின்ஸ்ஸுக்கும் இடையே டவுனிங் தெரு 10ஆம் இலக்க வாசஸ்தலத்தில் நடைபெற்ற பேச்சின் மூலம் அயர்லாந்து பிரிக்கப்பட்டது. அதுவே இன்றைய கொந்தளிப்பு நிலைக்கு வழி கோலியது.

[ஐ]

ஜெயலலிதா மறுப்பு

சென்னை, டிச. 15

தமிழ் நாட்டில் அ.தி.மு.கவுக்கும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிக்கும் இடையே தொகுதி உடன்பாடு ஏற்பட்டிருப்பதாக வெளியான தகவல்களை அ.தி.மு.க பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா மறுத்துள்ளார்.

(ஐ)

கியூபாவில் கிறிஸ்மஸ் விடுமுறை?

ஹவானா, டிச. 15

புனித பாப்பரசர் அடுத்த மாதம் கியூபாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதை ஒட்டி கிறிஸ்மஸ் தினம் விடுமுறை நாளாக அறிவிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை அங்கு வலுவடைந்து வருகிறது.

கம்யூனிஸ ஆட்சி நிலவும் கியூபாவில் 1969 ஆம் ஆண்டுக்கு முன்னர் கிறிஸ்மஸ் தினம் விடுமுறை நாளாக இருந்து வந்தது.

(ஐ)

வளைகுடாவில் கடுங் குளிர்

றியாட், டிச. 15

வளைகுடா நாடுகளில் கடுங் குளிர் ஏற்பட்டிருப்பதால் தொழில் வாய்ப்புத் தேடி அங்கு சென்ற இலங்கையர்கள் குளிரினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உஷ்ணத்தைத் தாங்கும் உடைகளையே பெரும்பாலும் தம்முடன் எடுத்துச் செல்லும் இலங்கையர்கள் அங்கு கடுங் குளிர் நிலவுவதால் அல்லற்பட நேரிடுகிறது.

(ஐ)

கம்யூனிஸ தலைவர் மரணம்

ஹவானா, டிச. 15

கியூபப் புரட்சியின் ''மாமா'' (UNCLE) என வர்ணிக்கப்படும் கம்யூனிஸ்ட் தலைவர் கார்லோஸ் ரபேல் ரொட்ரிகஸ் (வயது 84) கடந்த செவ்வாயன்று காலமானார்.

இவர் அதிபர் காஸ்ட்ரோவின் ஆலோசகர்களில் ஒருவராக நீண்ட காலம் பணியாற்றி வந்தார்.

(ஐ)

எல்-நைனோ வெப்ப நீரோட்டத்தால்

கடல்வாழ் உயிரினங்கள் பல இறந்துகரை ஒதுங்குகின்றன

அலாஸ்கா, டிச. 15

''எல்-நைனோ'' என்னும் உஷ்ணக் காலநிலை மாறுதலின் விளைவாக நூற்றுக்கணக்கான கடல் வாழ் உயிரினங்கள் அலாஸ்கா கடற்கரையில் இறந்த நிலையில் கரை ஒதுங்கி வருவதாக ஏ. எப். பி. செய்தி தெரிவித்தது.

''எல்-நைனோ'' உஷ்ண நீரோட்டம் காரணமாக கடல் நீரில் வெப்பநிலை அதிகரித்து வருவதன் விளைவாகவே திமிங்கிலங்கள் உட்பட பல கடல் வாழ் உயிரினங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

அண்மையில் இந்தோனேசியாவில் ஏற்பட்டிருக்கும் கடும் வரட்சிக்கு இந்த 'எல்—நைனோ' கால நிலை மாற்றமே காரணமாகும்.

எல்-நைனோவின் விளைவால் பூமியில் பல்வேறு அனர்த்தங்கள் அடுத்து வரும் மாதங்களில் நிகழும் என்று விஞ்ஞானிகள் எதிர்பார்த்துள்ளனர்.

(ஐ)

231 துட்ஸி அகதிகள் றுவாண்டாவில் மரணம்

கிகாலி, டிச. 15

வடமேற்கு றுவாண்டாவில் துட்ஸி அகதிகள்முகாம் ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் குறைந்தது 231 பேர் கொல்லப்பட்டனர் 227 பேர் காயமடைந்தனர் என்று ஐ. நா. அதிகாரிகள் தெரிவித்தனர்.

கிகாலியின் வடமேற்குப் பகுதியில் இருந்து 120 கிலோ மீற்றர் தொலைவில் முன்டா என்ற நகரில் இச்சம்பவம் இடம்பெற்றது. அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் மெடலின் அல்பிறைற் அம்மையாரி கிகாலிக்கு விஜயம் செய்த தருணத்தில் இத்தாக்குதல் இடம்பெற்றிருக்கிறது.

(ஐ)

கலப்பு இன ஆராய்ச்சிக்காக

மனிதர்களைக் கடத்தும் வேற்றுக் கிரக வாசிகள்!

பறக்கும் தட்டு மாநாட்டில் தகவல்

மெக்ஸிக்கோ, டிச. 15

கலப்பு இனங்களை உற்பத்தி செய்வது தொடர்பான ஆராய்ச்சிக்காக மனிதர்கள் பூமியில் இருந்து வேற்றுக்கிரக வாசிகளால் கடத்திச் செல்லப்படுகின்றனர்.

மெக்ஸிக்கோவில் நடை பெற்ற பறக்கும் தட்டுக்கள் தொடர்பான இரண்டாவது உலக மாநாட்டில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாற்றுக் கிரக வாசிகளுக்கும் மனிதர்களுக்கும் பிறக்கும் இரு கிரக கலப்பு இனம் பற்றிப் பரிசோதனை செய்வதற்காக பறக்கும் தட்டுக்களில் வரும் மாற்றுக் கிரக வாசிகளால் மனிதர்கள் இரகசியமாகக் கடத்திச் செல்லப்படுகின்றனர். உறக்கத்தின் போது கட்டில்களிலிருந்தே இவ்வாறு கடத்திச் செல்லப்படுகின்றனர். அவ்வாறு கடத்திச் செல்லப்படுபவர்களில் கடந்த கால நினைவுகள் மறக்கச் செய்யப்படுகின்றன. இவ்வாறு கடத்தப்பட்டவர்களில் சிலர் ஆழ் உறக்க நிலையில் பேச வைக்கப்பட்ட போதே தாங்கள் மாற்றுக் கிரகத்திற்குக் கடத்திச் செல்லப்பட்டது பற்றி தெரிவித்துள்ளார்கள்.

கடத்திச் செல்லப்பட்ட சில பெண்களின் கருவில் இவ்வாறான கலப்பு இன சிசுக்கள் வளர்ந்து கொண்டுள்ளனவென்பதும் இந்த மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. இந்தப் பெண்கள் பின்னர் இதே முறையில் கடத்திச் செல்லப்பட்டு குழந்தை பிரசவத்தின் பின்னர் கொண்டுவந்து விடப்படுவார்களென நம்ப இடமுண்டு என்றும் மாற்றுக் கிரக வாசிகள் மற்றும் பறக்கும் தட்டு தொடர்பாக ஆய்வுகள் நடத்தி வரும் நிபுணர்கள் தெரிவித்தார்கள்.

[ஐ]

இந்தியாவில் தேர்தலுக்கு முந்திய

கருத்துக்கணிப்பு தடை செய்யப்படும்?

புதுடில்லி, டிச. 15

தேர்தல் முடிவுகள் எப்படி இருக்கும் என்பது பற்றி வாக்களிப்பு நடைபெறுவதற்கு சில நாள்கள் முன்னரே கருத்துக் கணிப்புச் செய்யும் ஆய்வுகளைத் தடை செய்ய இந்தியத் தேர்தல் ஆணையகம் ஆலோசித்து வருவதாக தலைமைத் தேர்தல் ஆணையாளர் எம். எஸ் ஹில் தெரிவித்தார்.

வாக்களிப்பு நடைபெறுவதற்கு 72 மணித்தியாலங்களுக்கு முன்னர் கருத்துக்கணிப்பு செய்ய கனடா போன்ற சில நாடுகளில் அனுமதிவழங்கப்படுவதில்லை என்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை — நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அரச விமானத்தைப் பயன்படுத்த அனுமதிப்பது குறித்து தேர்தல் ஒழுங்கு விதிகளின் அடிப்படையில் முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

(ஐ)

ஆயுள் தண்டனை

11 வயது சிறுமியுடன் உடலுறவு கொண்டார் என்ற குற்றத்தின் பேரில் பிலிப்பீன்ஸ் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரோமியோ ஜோலோஸ் ஜோசுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

கிறிஸ்மஸ் புதுவருட மாபெரும் மலிவு விற்பனை

15 - 12 - 1997 தொடக்கம் 31 - 12 - 1997 வரை

சகலவிதமான புடவைகளுக்கும் சிறப்புத் தள்ளுபடி

கணேசன் ஸ்ரோர்ஸ் 201, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(இ-2356)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடிக்கையாளர்களுக்கு ஒரு நற்செய்தி!
நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு
லைடனின்
மலிவு விற்பனை
காலம்:
1-12-97 முதல் 31-12-97 வரை
(சகல பொருள்களுக்கும் விசேட கழிவு உண்டு)
லைடன் புடைவை நிலையம்
32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(சி-2189)

மீண்டும் யாழ். நகரில் ...
ஓட்டோ சப்பிளையர்ஸ்
லான்ட்மாஸ்டர்-குபோட்டா, யன்மார்
நீர் இறைக்கும் இயந்திரம் -
வில்லியஸ், றொபின், வூல்சிலி
ஸ்ரீராம் ஹொண்டா
என்பனவற்றின் உதிரிப்பாகங்களும்,
போர்-சிலிவுகளையும்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள:
ஓட்டோ சப்பிளையர்ஸ்
266A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(றெயில்வே கடவைக்கு அருகில்)
கிளை:
வீல் மூவர்ஸ், நல்லூர். (51745)

ஓம்
குருவே துணை
உயர்திரு. வே. முருகேசுசுவாமி
அவர்களின்
9 ஆம் மாத குருபூசை
15-12-1997
மேற்படி சுவாமி அவர்களின் 9 ஆம் மாத குரு பூசை வியாபாரி மூலை பழவத்தையைச் சேர்ந்த பொ. சின்னையா குடும்பத்தின் அனுசரணையுடன் இன்று செல்வச்சந்நிதி முருகனின் அபிஷேக ஆராதனை யோடு ஆரம்பமாகி சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடை பெறும் மகேஸ்வர பூசையுடன் நிறைவுறும். சுவாமி அவர்களின் அன்பர்கள், அடியார்கள் கலந்து குரு பூசைத் தினத்தைச் சிறப்பிக்குமாறு வேண்டுகின் றோம்.
சுபம்! சாந்தி!!
சந்நிதியான் ஆச்சிரமம்.
செல்வச்சந்நிதி,
தொண்டமானாறு. (51813)

சீநோரில் வலைகள் விற்பனை

நவாலி, டிச. 15

குருநகர் சீநோர் வலைத் தொழிற்சாலையில் கொழும் பிலிருந்து எடுத்துவரப்பட்ட ஒருதொகுதி வலை, கயிறு, நூல் என்பன கொழும்பு விலைக்கு விநியோகம் செய் யப்பட்டு வருகின்றன.

இவ் விநியோகத்தில் மீன வர்களுக்கே முன்னுரிமை யளிக்கப்படுவதால் மீனவர் கள் உடனடியாகத்தொடர்பு கொள்ளுமாறு முகாமையா ளர் தெரிவித்துள்ளார்.

(ஐ-100)

வெள்ளி விழாவில் கௌரவிப்பு

திருநெல்வேலி, டிச. 15

யாழ். பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுற வுச் சங்கத்தின் வெள்ளி விழா அண்மையில் நடை பெற்ற போது சங்கத்தில் 25 வருடகாலம் சேவையாற் றிய ஊழியர்களுக்கும், உறுப் பினர்களுக்கும் அன்பளிப்பு கள் வழங்கப்பட்டு கௌரவிக் கப்பட்டனர்.

சங்கத் தலைவர் த. செந் தில்ராசா தலைமையில் நடை பெற்ற இவ் விழாவில் பிரதம விருந்தினர்களாக யாழ். கூட் டுறவு உதவி ஆணையாளர் (பனம் பொருள்) கே. பர நிருபசிங்கம், யாழ். கூட்டு றவு உதவி ஆணையாளர் (கணக்காய்வு) திருமதி கோமளா திருநாவுக்கரசு ஆகியோர் கலந்து கொண்ட னர்.

(ஐ-135)

யாழ். நகரில்!
மீண்டும் O. E. T. C
சேவை
★ தட்டச்சு இயந்திரம்
★ றோணியோ இயந்திரம்
★ பைண்டர் என்பன சிறப்பாகத் திருத்தம் செய்து கொடுக்கப் படும்.
தொடர்பு;-
இல: 140
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(51810)

Bayer BAYER
யாழ். நெற் செய்கையாளர்களே!
றோம் அன்ட் காஸ் நிறுவனம் அறிமுகப்படுத்தும்
மிமிக் 20 எவ்.
ரிபூபெனோசைட்
நெற்பயிரினைத் தாக்கும் இலை மடிச்சுக்கட்டிகளை
முற்றாக ஒழித்துக் கட்டுகிறது
மிமிக் 20 எவ்.
நெற்பயிரில் காணப்படும் இலைமடிச்சுக்கட்டிப்
புழுக்களை மட்டும் இது அழித்தொழிப்பதால்
பயிருக்கு நன்மை தரும் பூச்சி புழுக்கள் பேணப்பட்டு
பயிர் வளம் பேண உதவுகின்றது.
ஹேக்கெம் நிறுவனத்தால் வழங்கப்படும்
இவ் இரசாயனத்தை கமநல கேந்திர நிலையங்களிலும், முன்னணி
விவசாய இரசாயன விற்பனையாளர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.
ஹேக்கெம் லிமிட்டெட்,
25, பொஸ்ரர் லேன்,
கொழும்பு - 10
(பீடை நாசனிகள் அபாயகரமானவை அவதானமாகக் கையாளவும்) (51785)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

திருமதி அன்னமுத்து சண்முகராசா

மலர்வு: 16 — 4 — 1921 உதிர்வு: 15 — 11 — 1997

எமது குடும்பத்தலைவியின் மரணச் செய்தி கேட்டு விரைந்து வந்து எமக்கு ஆறுதல் கூறிய அன்பு நெஞ் சங்களுக்கும், அவரின் மரணச்சடங்கில் பங்கு கொண் டோருக்கும், இரங்கற் செய்திகள் அனுப்பியோருக் கும் மற்றும் பல வழிகளிலும் எமக்கு உதவியோருக் கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித் துக் கொள்வதோடு இன்று நடைபெறும் ஆத்ம சாந் திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர் களை அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

ச. இலங்கைநாதன்
(அன்னராஜாஸ்ரோர்ஸ்)
639/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (51840)

10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

"உயிர்சேவைக்கு உடல் மண்ணுக்கு"

அமரர் வே. த. தணிகாசலம்
அல்வைத் தனி
(அதிபர், அல்வாய் ஸ்ரீலங்காவித்தியாசாலை)

தோற்றம்: 12—09—928 மறைவு: 07—12—1987

திதி: 15—12—1997

பத்தாண்டுகள் போனதுவோ!
பாசமுள்ள குலவிளக்கே உங்களை மறப்போமோ?
வாடியே துடிக்கின்றோம்
வந்தெமைப் பார்க்க மாட்டீர்களோ?

உங்கள் நினைவுடன் வாழும்:
மனைவி, மக்கள், மருமக்கள்.
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

ராஜஸ்தலம்,
அல்வாய். (51824)

நியாய விலையில் பொருள்கள் கிடைப்பதை உறுதி செய்ய

நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரிகள் யாழ். மாவட்டத்தில் நியமிக்கப்படுவர்

செய்தியாளர் மாநாட்டில் சோமபால குணதீர தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிச.15

கூடாநாட்டு மக்களுக்கு நியாயமான விலையில் பொருள்கள் கிடைக்க வசதி செய்யும் நோக்கில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரிகள் அரச கூட்டுஸ்தாபன மற்றும் கூட்டுறவுத்துறையில் நியமிக்கப்பட இருக்கிறார்கள் நுகர்வோருக்குகொழும்பு விலையில் —நியாய விலையில் —பொருள்கள் விற்பனைசெய்யப்படுவதை அவர்கள் மேற்பார்வை செய்வர்.

வடமாகாண மீள் குடியமர்வு அதிகார சபைத்தலைவரும், அத்தியாவசிய சேவைகள் நாயகமுமாகிய சோமபாலகுணதிர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். செயலகத்தில் நேற்று முன்தினம் அவர் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே இத்தகவலை வெளியிட்டார்.

அங்கு அவர் தெரிவித்த முக்கிய விடயங்கள் வருமாறு:

★ அரச கூட்டுஸ்தாபனங்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் கொழும்பில் இருந்து கட்டணம் இன்றி கப்பலில் பொருள் ஏற்றி வர அனுமதிக்கப்பட்டுள்ளது. இதற்காக 'மேரிச் ஹண்டி' என்ற கப்பலை நாம் வாடகைக்கு அமர்த்தியுள்ளோம்.

இக்கப்பலில் எடுத்து வரப்படும் பொருள்களை கொழும்பு விலையில் — நியாயமான விலையில் — இங்கு விற்பனை செய்யமுடியும் என எதிர்பார்க்கிறோம்.

★ கப்பல் கட்டணம்இன்றி எடுத்து வரப்படும் பொருள்கள் பொதுமக்களுக்கு நியாய விலையில் கிடைக்க விசேட திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் படி வேலையற்றிருக்கும் பட்டதாரிகள் நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரிகளாக நியமிக்கப்படுவர். பருத்தித்துறை, காங்கேசன்துறை துறைமுகங்களில் தலா இருவரும், கட்டடப் பொருள் கூட்டுஸ்தாபனம், கூட்டுறவு மொத்த விற்பனைநிலையம், சதொசல, அரச விற்பனைக் கூட்டுஸ்தாபனம், பெற்றோலியம் கூட்டுஸ்தாபனம், மற்றும் சகல கூட்டுறவுச்சங்கங்கள் ஆகியவற்றில் தலா ஒவ்வொருவரும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரிகளாக நியமனம் பெறுவர். இவர்கள் பொருள்கள் கொழும்பு விலையில் விற்பனையாவதை உறுதி செய்வர்.

★ இத்திட்டத்தின் கீழ் முதலில் எரிபொருள்கள், சிமெந்து ஆகியன எடுத்து வரப்படும். சிமெந்தை இங்கு 350 ரூபாவுக்கு விற்க நடவடிக்கை எடுக்கப்படும்.

★ இத்திட்டத்தின் கீழ் நியமனம் பெறும் அதிகாரிகளிடம் மக்கள் தமது முறைப்பாடுகளைச் செய்யலாம். அவர்கள் அதுகுறித்து உடன் நடவடிக்கை எடுப்பர்.

ஆயிரத்து 200 தொன் நாட்டரிசி வரும்

★ கிறிஸ்மஸ் — புத்தாண்டுக் கொண்டாட்டங்களுக்காக ஆயிரத்து 200 மெற்றிக் தொன் நாட்டரிசி யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட வுள்ளது.

★ யாழ். மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறி வகைகளை கப்பல் மூலம் கட்டணம் எதுவுமின்றி கொழும்புக்கு எவரும்அனுப்ப வசதி செய்து தரப்படும். இதன்படி ஜனவரியில் 500 மெற்றிக் தொன் வெங்காயத்தையும், பெப்ரவரியில் 2 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் வெங்காயத்தையும், மார்ச்சில் 2 ஆயிரம் மெற்றிக் தொன் வெங்காயத்தையும் கொழும்புக்கு அனுப்ப கப்பல் வசதி செய்து தரப்படும்.

★ இதே போல் ஜனவரியில் 500 மெற்றிக் தொன் வாழைப்பழமும், பெப்ரவரி முதல் ஒகஸ்ட் வரை மாதாந்தம் ஆயிரம் மெற்றிக் தொன் வாழைப்பழமும் அனுப்பவசதி செய்யப்படும்.

★ மரக்கறி வகைகளை அனுப்பவும் வசதி செய்து தரப்படும்.

★ யாழ். விவசாயத் தேவைக்கு ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா உரம் கப்பல் மூலம் எடுத்து வரப்படும்.

★ யாழ். புனரமைப்பு பணிகளுக்கு இந்திய அரசாங்கம் வழங்கிய 4 ஆயிரம் மெற்றிக் தொன் சிமெந்தில் ஆயிரம் மெற்றிக் தொன் சிமெந்து இம்மாத இறுதியில் கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படும். அவை பாதிக்கப்பட்ட — வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ளவர்களுக்கு அரச அதிபரால் வழங்கப்படும்.

இந்தியா வழங்கிய கூரைத் தகடுகள்

★ இந்திய அரசு வழங்கிய கூரைத்தகடுகள் இங்குள்ள கலாசாரத்துக்கு ஏற்றது அல்ல எனத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவை கட்டடப் பொருள் கூட்டுஸ்தாபனத்துக்கு விற்பனை செய்யப்பட விருக்கின்றன. இதன் மூலம் கிடைக்கும் பணத்தில் ஓடு கொள்வனவு செய்யப்பட்டு அவை கப்பல் மூலம் இங்கு அனுப்பப்படும்.

★ புனர்வாழ்வுப் பணிகளுக்குத் தேவையான கட்டட தொழிலாளர்கள், தச்சு தொழிலாளர்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டது புதியவர்களைச் சேர்த்து அவர்களை இப்பணியில் ஈடுபடுத்தி பயிற்சி அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. தேசிய பயிலுநர் சபை இதற்கான பயிற்சியையும், கொடுப்பனவையும் வழங்கும்.

★ உணவு, விவசாய திட்டத்தின் உதவியுடன் குருநகரில் 25 லட்சம் ரூபா செலவில் ஐஸ் தொழிற்சாலை நிறுவப்படும்.

★ சிநோர் மீன்பிடிவலைத் தொழிற்சாலையை மீள இயங்க வைக்க நோர்வே அரசாங்கம் உதவ முன் வந்துள்ளது.

★ யாழ்ப்பாணத்தில் இருந்து இறால், நண்டு ஆகிய வற்றை விமான மூலம் கொழும்புக்கு எடுத்துவர பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

★ யாழ். குடாநாட்டில் மின் சாரம் வழங்க 16 மெகா வாட்ஸ் வலுவுள்ள எட்டு ஜெனரேட்டர்கள் இங்கு பொருத்தப்படும். அவை தற்சமயம் கப்பலில் ஏற்றப்பட்டுள்ளன.

(ஐ-3)

ச.ச. நிலைய சம்மேளன போட்டிகள்

திருநெல்வேலி, டிச.15

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம் மாவட்டத்திலுள்ள சனசமூக நிலையங்களுக்கிடையில் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, பொது அறிவுப் போட்டி, தாச்சிப் போட்டி, கிரிக்கெட் போட்டி, உதைபந்தாட்ட, கரபந்தாட்ட, வலைப்பந்தாட்ட போட்டிகளை எதிர் வரும் ஜனவரி மாதத்தில் நடத்துவதென்று தீர்மானித்துள்ளது.

இப்போட்டிகள் சனசமூக நிலையங்களின் சமாஜமட்டத்தில் நடத்தப்பட்டு இறுதிப் போட்டி யாழ். மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட விருப்பதாக சம்மேளனத்தின் தலைவர் நா. போஜன் தெரிவித்தார். இப்போட்டிகளில் பங்குபற்றும் சன சமூக நிலையங்கள் தங்கள் விண்ணப்பங்களை ஜனவரி 10 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-135)

கூட்டுறவுச் சபை கூட்டம்

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை யாழ். கூட்டுறவுச் சபை மண்டபத்தில் சபைத் தலைவர் பெ. கனகசபாபதி தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு பற்றிய சுற்றறிக்கை பற்றியும், மற்றும் பல விடயங்கள் பற்றியும் ஆராயப்படவுள்ளதாக யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் செயலாளர் கு சிவகுப் பிரமணியம் தெரிவித்தார்.

(ஐ-135)

உணவு முத்திரை

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இடம்பெயர் நிவாரண முத்திரைகள் நாளை செவ்வாய்கிழமைக் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களில் வைத்து விநியோகிக்கப்படவுள்ளன. முத்திரைக்குரியவர்கள் அன்றைய தினத்திலேயே சென்று முத்திரைகளைப் பெறும்படியும்—

அன்றைய தினம் முத்திரையைப் பெறத்தவறியவர்களின் முத்திரைகள் பின்னர் வழங்கப்படமாட்டாது என்றும் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஐ)

விஷ்ணு சிலையின் நகைகள் மீட்பு

மாவலல்ல புதிய நகரத்தில் அமைந்துள்ள ஸ்ரீ கீர்த்தி ரஜமகா விகாரையின் கதவுகளை உடைத்து உட்புகுந்த கொள்ளையர்கள் அங்கிருந்த விஷ்ணு சிலைக்கு அணியப்பட்டிருந்த அனைத்து நகைகளையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

கொள்ளையடிக்கப்பட்ட நகைகளின் பெறுமதி சுமார் ஒன்றரை லட்சம் ரூபா எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-10)

பொறுப்பானவர்களை சட்டத்தின் முன் நிறுத்துக

தமிழர் விடுதலைக் கூட்டணி கோரிக்கை

களுத்துறைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற சம்பவம் குறித்து உடனடியாக விசாரணை நடத்தப்பட்டு பொறுப்பானவர்கள் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட வேண்டும்.

களுத்துறைச் சிறைச்சாலையில் தமிழ் பேசும் அரசியல் கைதிகள் மூவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக விடுத்த அறிக்கையில் தமிழர் விடுதலைக் கூட்டணி இவ்வாறு கோரியுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:—

களுத்துறைச் சம்பவம் குறித்து உடனடியாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு பொறுப்பானவர்கள் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட வேண்டும்.

இச் சம்பவத்தின் போது சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் பொறுப்புணர்ச்சி, பங்களிப்புகள்பற்றியும் ஆராயப்படவேண்டும்.— தாக்குதலில் ஈடுபட்டவர்கள் பயங்கரமான ஆயுதங்கள் வைத்திருந்தார்கள். இதைத்தடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை.

ஏனைய தமிழ் — முஸ்லிம் அரசியல் கைதிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இக் கைதிகள் வேறு இடத்திற்கு மாற்றப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-21)

லியோ கழகம் அமைக்க முயற்சி

கோப்பாய் வைன்ஸ் கழகம் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் லியோ கழகம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

(ஐ-135)

விளையாட்டு பயிற்றுநர்கள் தெற்கில் இருந்து வருவர்

யாழ்ப்பாணம், டிச. 15

யாழ்ப்பாணத்தில் கிரிக்கெட் விளையாட்டு உட்பட ஏனைய விளையாட்டுத் துறைகளை ஊக்குவிக்க நெதர்லாந்து அரசின் உதவியுடன் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படும்.

யாழ். செயலகத்தில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் வடபகுதி புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபைத் தலைவர் சோமபால குணதிர மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்

யாழ்ப்பாணத்தில் விளையாட்டுத்துறையை ஊக்குவிக்க அடுத்த மாதம் முதல் பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படும். கொழும்பில் இருந்து பயிற்றுநர்கள் இங்கு அனுப்பப்படுவர். எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் யாழ். கிரிக்கெட் அணி கொழும்பு, கண்டி, காலி மாவட்டங்களில் போட்டிகளில் சுற்றுப்பற்ற ஏற்பாடு செய்யப்படும் — என்றும் அவர் தெரிவித்தார்.

(ஐ-3)

நினைவலைகள்

10 ஆவது ஆண்டு 65 ஆம் நாள்

திரு. க. செல்லையா
தோற்றம்: 07 - 05 - 1938
மறைவு: 21 - 12 - 1987

திருமதி பூமணி செல்லையா
தோற்றம்; 12 - 10 - 1938
மறைவு: 13 - 10 - 1997

எங்கள் தெய்வங்களே! - நீங்கள்
என்றும் அணையாத தீபங்கள் !!!
எத்தனை ஆண்டுகள் எட்டிப் போகினும்
எங்கள் நினைவுகளில் நீங்கள் ... ...

உங்கள் ஆத்ம சாந்திக்கு என்றும் வேண்டி நிற்கும்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

678, கண்டி றோட்,
அரியாலை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

Benley Super மோட்டார் சைக்கிள், நல்ல நிலையில் உள்ள கமெரா விற்பனைக்குண்டு. தொடர்பு: வே. தவச்செல்வன் (உதயன் செய்தியாளர்) செம்பியன்பற்று, வடமராட்சி. (51827)

உடன் விற்பனைக்கு

பாவிக்கக் கூடிய நல்ல நிலையிலுள்ள மோட்டார் சைக்கிள்களுக்குரிய உதிரிப் பாகங்கள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: T. ஜெயராஜ், ஆடியபாதம் வீதி, கொக்குவில் சந்தி. (51841)

விற்பனைக்குண்டு

MD 90 HONDA மோட்டார் சைக்கிளும், சலரோக நோயாளிக்கான இன்சுலின் மருந்தும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 124, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (ICRC - க்கு அருகில்) (51837)

தவறிவிட்டது

நளாயினி கனகரத்தினம் என்பவரது 716590569V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை உட்பட சிறுதொகை பணத்துடன் மணிபேர்ஸ் நல்லூர் வடக்கு வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். நிமல் வீடியோ சென்ரர், பலாலி றோட், யாழ்ப்பாணம். (51833)

வகுப்புக்கள்

ஆண்டு 4 — ஆண்டு 8 வரை தனிப்பட்ட முறையில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் கற்பிக்கப்படும். தொடர்பு: M. செல்வராஜா, இல. 38, சோமசுந்தரம் லேன், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (51825)

இராசி பலன்

சோதிட ஞானி சண் — மாஸ்ரர் எழுதிய 98 இல் வியாழன், சனிமாற்றப் பலாபலன் நூல் எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். ரூபா 13/-. பிறேம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (51726)

'ராகிங்' தொடர்பாக கைதாகும் மாணவருக்குப் பிணை இல்லை

விரைவில் சட்டம் அமுலுக்கு வரும்

கொழும்பு, டிச. 15

'ராகிங்'கில் ஈடுபடும்மாணவர்கள்தொடர்பாக தொடரப்படும் வழக்குகள் விசாரிக்கப்பட்டு முடிக்கப்படும்வரை அவர்களுக்கு பிணை மறுக்கப்படும் விதத்தில் புதிய சட்ட விதிகளைக் கொண்டுவர ஆலோசிக்கப்படுவதாக கல்வி உயர் கல்வி அமைச்சர் ரிச்சாட் பத்திரான தெரிவித்துள்ளார்.

கல்வி நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களுக்கு சேதம் அல்லது இழப்பு ஏற்படுத்தும் மாணவர்களுக்கும் இந்த விதி பொருந்தும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அமைச்சரால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை இன்று அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்படும் எனவும் இது தொடர்பான சட்டவரைபு அடுத்த மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

யாழ். கலைஞர்கள் குழு தென்னிலங்கை செல்லும்

யாழ்ப்பாணம், டிச. 15

யுனெஸ்கோ கலாசார திட்டத்தின் கீழ் குடாநாட்டைச் சேர்ந்த கலைஞர்கள் அடங்கிய குழு ஒன்று விரைவில் தென்பகுதிக்கு கலாசாரச் சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளது. எதிர்வரும் தைப்பொங்கலுக்கு முன்னர் இக் கலாசாரப் பயணம் இடம்பெறும்.

வடபகுதி புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபைத் தலைவர் சோமபால குணதீர இத்தகவலை வெளியிட்டார்.

யாழ்ப்பாணத்தில் கர்நாடக இசை நிகழ்ச்சிகளைப் பதிவு செய்து இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனத்தில் ஒலிபரப்ப வசதியாக யாழ்ப்பாணத்தில் கலைக்கூடம் ஒன்று அமைக்கப்படும் என்றும் அவர் கூறினார். (ஐ-3)

யாழ். நீதிமன்றைத் திருத்த விரைவில் நிதி கிடைக்கும்

யாழ். மாவட்ட நீதி மன்றம் இயங்குகின்ற கட்டடத்தை உடனடியாக திருத்தியமைக்கத் தேவையான நிதியை விரைவிலேயே வழங்குவதாக தற்போது யாழ்ப்பாணம் வந்துள்ள வடமாகாண மீள் குடியமர்வு புனர்வாழ்வு அதிகாரசபையின் தலைவரும், அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகமுமான சோமபால குணதீர தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட நீதிமன்றிற்கு கடந்த வாரம்விஜயம் செய்த அவர் அங்கு சட்டத்தரணிகளையும், பதில் நீதிவானையும் சந்தித்துக் கலந்துரையாடியபோதே இதனைத் தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலில் யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன், பதில் நீதிவான் க. கேசவன், சட்டத்தரணிகளான இ. உருத்திரா, ச. சிவபாலேந்திரா, திருமதி இளங்கோவன், திருமதி உருத்திரேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நீதிமன்றத்தைத் திருத்தத் தேவையான நிதியை வழங்குவதுடன் நீதிமன்றத் தேவைக்காக ஒரு ஜெனரேற்றரும் அரச அதிபரிடம் வழங்கப்பட உள்ளது. அதனையும் பெற்றுக் கொள்ளுமாறு அவர் தெரிவித்தார் (ஐ-9)

2 ஆம் ஆண்டு இதயஅஞ்சலி

Dr. ஆறுமுகம் சசிகாந்தன் M.B.B.S(Cey.)

(வைத்தியகலாநிதி, யாழ். போதனா வைத்தியசாலை)

மலர்வு; 17 — 02 — 1966 உதிர்வு: 15 — 12 — 1995

நெஞ்சமது துடித்திட
நினைவுகளைத் தந்துவிட்டு
நீ எம்மைப் பிரிந்து
இரண்டாண்டுகள் சென்றதையா
நிஜமல்ல கனவு போல்
இருக்குதையா உன் பிரிவு
நீ எம்மைப் பிரிந்தாலும்
எத்தனை ஆண்டு சென்றாலும்
நீங்கா நினைவாய்
உன் நினைவு எம் நெஞ்சில்
என்றென்றும் வாழ்ந்திடுமே.

உன் நினைவை நெஞ்சிலே சுமந்திடும்!
குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர்கள்.
187/7 (12), கிலனர் ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (51819)

சிறி தர்ஷா நகைப் பூங்கா

ஓராண்டு முடிவடைந்து ஓய்யாரமாய் நடைபோட்டு இரண்டாம் ஆண்டில் காலடி எடுத்து வைத்திருக்கும்

சிறி தர்ஷா நகைப் பூங்காவானது

அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரினதும் ஆதரவை நாடி நிற்கின்றது.

★சிறி தர்ஷா நகைப்பூங்கா★

யாழ். நகரில் நம்பிக்கை, நாணயம், கைராசி பதித்தவர்கள்.

நீங்கள் விரும்பிய டிசைன்களில் தங்க நகைகளை உத்தரவாதத்துடன் உடன் பெற்றுக் கொள்ள இன்றே நாடவேண்டிய ஒரே இடம்.

எம்முடைய ஸ்தாபன வளர்ச்சிக்கு வழிகோலிய அனைவருக்கும் நன்றி கூறுகின்றது.

★சிறி தர்ஷா நகைப்பூங்கா★

இல. 304, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(51756)

2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 22 — 03 — 1917

உதிர்வு: 08 — 12 — 1995

அமரர் வே. நடராசா

அன்பிற்கும், பண்பிற்கும் பிறப்பிடமாய், குடும்பத்தின் குலவிளக்காய் எம் எல்லோரையும் நல்வழி நடத்தி வாழ வைத்த அன்புத் தெய்வமே! உங்கள் புன்சிரிப்பும், அரவணைப்பும் ஆறுதல் வார்த்தைகளும் என்றும் எம்மனதை விட்டு நீங்காத நினைவுகளாய் அமரத்துவம் எய்தினீர்கள். ஆண்டு இரண்டு சென்றாலும் உங்கள் நினைவலைகள் என்றும் எம்மனதை விட்டு அகலாது. ஆறாத் துயரிலே நாம் தவிக்கின்றோம்.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

30, சின்னாலன் கண்டு லேன்,
அரியாலை,
யாழ்ப்பாணம். (51783)

செல்வச்சந்நிதியான் துணை

திருமண மங்களத் திருநாள்

எமது மகன்
திருநிறைசெல்வன்
சி. ஸ்ரீதரன்

எமது மகள்
திருநிறைசெல்வி
சி. சுமணா

இவர்கள்

சுவிஸ் BASSA LUFVEN நகரில் நிகழும் மங்களகரமான ஈசுர வருடம் கார்த்திகை மாதம் 30ஆம் நாள் (15 - 12 - 97) திங்கட்கிழமை காலை 10 மணி 48 நிமிடம் முதல் 11 மணி 56 நிமிடம் வரை வரும் சுபமுகூர்த்த வேளையில் மாங்கலிய சகிதம் இணைகிறார்கள்.

உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரும் மணமக்களை வாழ்த்தி நல்லாசி வழங்கும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

திரு. திருமதி
சின்னத்தம்பி நாகம்மா
வயல்கரை,
மீசாலை வடக்கு,
சாவகச்சேரி.

திரு. திருமதி
சின்னத்தம்பி மாணிக்கம்
மாவடி ஒழுங்கை,
அச்சுவேலி தெற்கு.
(இமாசு வாகன தையல் நிலையம்,
ஆவரங்கால்)

(51791)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இன்றைய நிலையில் தேர்தல் அர்த்தமற்றது

புதிய ஜனநாயகக் கட்சி அறிக்கை

யாழ்ப்பாணம், டிச. 15

குடாநாட்டில் நிலவும் இன்றைய சூழ்நிலையில் அங்கு உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்த அரசாங்கம் எடுத்த முடிவு அர்த்தமற்ற ஒன்றாகும்.

புதிய ஜனநாயகக் கட்சியின் அரசியல் குழு சார்பில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் சி. கா. செந்திவேல் விடுத்த அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் எடுத்துள்ள முடிவு அர்த்தமற்ற ஒன்றாகும். அங்கு அவசரப்பட்டு தேர்தலை நடத்துவதால் மேலும் சிக்கல்களையும் புதிய புதிய பிரச்சினைகளையுமே தோற்றுவிக்க முடியும். இதனால் ஏற்கனவே பாதிப்படைந்த மக்களே மீண்டும் துன்பிகைச் சுமக்க வேண்டியவர்கள் ஆவார்கள். எனவே உள்ளூராட்சித் தேர்தல் நடத்தும்முடிவை நிறுத்திநியாயமானதும் முழுமையானதுமான அரசியல் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்பதையே புதிய-ஜனநாயகக் கட்சி வற்புறுத்துகின்றது.

குடாநாட்டில் இயல்பு வாழ்க்கை இன்னும் முழுமையாகத் திரும்பவில்லை. மக்களின் அடிப்படைத் தேவைகள், வசதிகள் பூர்த்தி செய்யப்படவில்லை. சில பகுதிகளில் மீளக் குடியமர்வதற்கு அனுமதிக்கப்படவில்லை. மீளக் குடியமர்ந்தவர்களுக்கு உரிய இழப்பீடுகள் முழுமையாக வழங்கப்படவில்லை. யாவற்றையும் இராணுவ நிர்வாகமே தீர்மானித்து மேற்கொண்டு வருகின்றது.

அதேவேளை மோதல்கள் ஆங்காங்கே இடம்பெற்று வருகின்றன. பலவித கட்டுப்பாடுகள், நடைமுறைகள் என்பவற்றின் மத்தியிலேயே மக்கள் வாழ்ந்து வருகின்றனர். ஒவ்வொரு பொழுதையும் மக்கள் அச்சம் பீதியுடனேயே கழித்து வருகின்றனர். அங்கு அரசியல் கட்சிகள் ஜனநாயக பூர்வமாகச் செயற்படக் கூடிய சூழல்லதும் கிடையாது. சுதந்திரமாகத் தேர்தலில் ஈடுபடவோ சுதந்திரமாக மக்கள் வாக்களிக்கவோ முடியாத நிலைதான் அங்கு காணப்படுகிறது ஏற்கனவே இடம்பெற்ற சில தேர்தல்களும் இவ்வாறான சூழலில் நடத்தப்பட்டமையினாலேயே அவை அர்த்தமற்றவையாக்கப்பட்டன என்பதை அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே அரசாங்கம் தேர்தல்நடத்தும்முடிவைமறுபரிசீலனை செய்ய வேண்டும் அதேவேளை அரசியல் தீர்வு முழுமையாகவும் நியாயபூர்வமாகவும் முன்னெடுக்கப்பட்டு உரிய இணக்கம் ஏற்படும் சூழலே குடாநாட்டில் தேர்தல் நடைபெறத்தகுந்த நேரமாகும் என்பதையே எமது புதிய ஜனநாயக கட்சி சுட்டிக் காட்டுகிறது— எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

அதிரடிப்படை முகாம்மீது புலிகள்மோட்டார்தாக்கு

அம்பாறைப் பகுதியில் சம்பவம்

மட்டக்களப்பு, டிச. 15

அம்பாறை மாவட்டம் சென்றல் முகாம் 13 ஆம் கொலனி விசேட அதிரடிப்படை முகாம் மீது நேற்றுக் முன்தினம் காலை 10.30 மணியளவில் விடுதலைப் புலிகள் மோட்டார் தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலில் முகாம் பொறுப்பதிகாரி உட்பட 2 பேர் காயம் அடைந்தனர்.

அதே நேரம் திருக்கோவில் என்னுமிடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் சுப்பிரமணியம் வேலாயுதம் என்ற கிராமவாசி காயமடைந்தார்.

நேற்றுக் காலை இக்கிராமத்தில் நடைபெற்ற மற்றுமோர் சம்பவத்தில் ஒருவர் பலியானார். இவர் விடுதலைப் புலி உறுப்பினர் என பாதுகாப்புத் தரப்புக் கூறுகின்றது. (இ-21)

நாவல் மரங்கள் விறகுக்காக அழிப்பு!

செம்பியன்பற்று, டிச. 15

வடமராட்சி கிழக்குப் பகுதியில் அம்பன், குடத்தனை நாகர்கோயில், மாமுனை ஆகிய பகுதிகளில் பயன்தரும் நாவல் மரங்கள் விறகுக்காக பெருமளவில் அழிக்கப்படுவதாக இப்பகுதி விவசாய அமைப்புக்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளன.

இதேவேளை நாவல் மரங்கள் விறகுக்காக அழிக்கப்படுவதை விரைவில் தடை செய்யப்போவதாக மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் தெரிவித்தார். (ஐ-36)

குவைத் நட்டஈடு மோசடி; விசாரணைக்கு உத்தரவு

கொழும்பு, டிச. 15

குவைத்தில் வேலை இழந்தோருக்கான நஷ்டஈட்டு கொடுப்பனவு நிதியில் மோசடி இடம்பெற்றதாக தொடர்பான தகவலை அடுத்து அது குறித்து விசாரணை நடத்தப்படவுள்ளது.

குவைத்நாட்டைஈராக் ஆக்கிரமித்ததைத் தொடர்ந்து தொழில் வாய்ப்புக்களை இழந்த இலங்கையர்களுக்கு நட்டஈடு வழங்குவதற்காக ஐ. நாவின் நட்டஈட்டு ஆணையகத்தால் வழங்கப் பட்ட நிதியை வங்கியில் இட்டபோது வட்டியாகக் கிடைத்த பல கோடி ரூபாவைப் பாதிக்கப்பட்டவர்களுக்கு பகிர்ந்து வழங்காமல் அதை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியக அதிகாரிகள் தங்கள் வெளிநாட்டு உல்லாசப் பயணங்களுக்குப் பயன்படுத்தினார்கள் என வெளியான தகவலை யடுத்தே அதுகுறித்து உடனடியாக விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு தொழில் அமைச்சர் ஜோன் செனிவிரத்ன வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தைப் பணித்துள்ளார். (ஐ-10)

சேவை நலம் பாராட்டு விழா

நெடுந்தீவு, டிச. 15

நெடுந்தீவு மாவிலித்துறை றோ. க. பாடசாலையின் முன்னாள் அதிபர் செல்வி கமலாம்பிகை வைத்தியநாதனின் சேவை நலம் பாராட்டு விழா அதிபர் திருமதி பரமேஸ்வரி தோமஸ் தலைமையில் கடந்த வாரம் நடைபெற்றது.

நெடுந்தீவு பல நோ. கூ. சங்கப் பொதுமுகாமையாளர் இரா. தர்மலிங்கம், கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். தில்லைநாதன், மகாவித்தியாலய அதிபர் திருமதி பி. எம். ஜே. அன்ரனி, பிரதிஅதிபர் திருமதி கி. சாரதாதேவி ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. [ஐ-111]

கோண்டாவிலில் மிதி வெடி சம்பவம்

யாழ்ப்பாணம், டிச. 15

காணி துப்புரவு செய்த சமயம் அங்கிருந்த மிதிவெடி ஒன்று வெடித்ததில் வயோதிபர் ஒருவர் தனது காலை இழந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த அப்பையா அருளம்பலம் (வயது 52) என்பவரே காயம் அடைந்தவர் ஆவார். (இ-71)

அதிரடிப்படை சிப்பாய் ஒருவர் கடத்தப்பட்டார்

மட்டக்களப்பு— வாழைச்சேனை வீதியில் பயணம் செய்த விசேட அதிரடிப்படை வீரரொருவர் வழிமறித்து கடத்தப்பட்டுள்ளார்.

ஆரையபதி விசேட அதிரடிப்படை முகாமில் பணியாற்றும் பத்திரன்ன என்பவர்தான் கடத்தப்பட்டவராவார்.

காத்தான் குடியிலிருந்து தனியார் வாகனமொன்றில் பொலன்னறுவை நோக்கி பயணம் செய்து கொண்டிருக்கையில் ரூம்புறுமுலை என்னும் இடத்தில் வைத்து இவர் கடத்தப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-21)

பொதுசன மாதாந்த உதவிப்பணம்

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் இரு மாதங்களுக்குரிய பொதுசன மாதாந்த உதவிப்பணம் இன்று திங்கட்கிழமை தொடக்கம் வழங்கப்படவிருக்கிறது.

ஒக்ரோபர், நவம்பர் ஆகிய மாதங்களுக்குரிய பொதுசன மாதாந்த உதவிப்பணமே அந்தந்தப்பகுதி தபால் நிலையங்கள் மூலம் வழங்கப்படும் என்று பிரதேச செயலர் சி. பசுபதி தெரிவித்துள்ளார். (ஐ-109)

பொலீஸ் இராணுவ சீருடைகள் கொள்ளை!

மட்டக்களப்பு ஒட்டமாவடியிலுள்ள தையல் கடை ஒன்றிலிருந்து பொலீஸ், இராணுவச் சீருடைகள் வெள்ளிக்கிழமை இரவு இனந் தெரியாத நபர்களால் கொள்ளையடிக்கப்பட்டன.

சீருடையில் காணப்பட்ட இந்நபர்கள் மின் மாற்றி ஒன்றைச் குண்டு வைத்துத் தகர்த்த பின்பு இக்கொள்ளையில் ஈடுபட்டனர்.

அதே நேரம் பிறைந்துறைச் சேனையில் நேற்று முன்தினம் இரவு ஊர்காவலர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இப்பிரதேசத்திலுள்ள மின் மாற்றி ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டொன்று நேற்றுக்காலை மீட்கப்பட்டு செயலிழக்கச்செய்யப்பட்டது. (இ-21)

★ வன்னியில்

நனைந்த காகிதாதிகளில் விடை எழுதும் மாணவர்!

வவுனியா, டிச. 15

வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் நடைபெறும் ஜி.சீ.ஈ. (சாதாரண) பரீட்சைக்காக எடுத்துச் செல்லப்பட்ட காகிதாதிகள் மற்றும் பத்திரங்கள் மழையில் நனைந்துவிட்டன.

இவற்றை பாவிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக வவுனியா கல்விப் பணிப்பாளர் பரீட்சை ஆணையாளருக்கு அறிவித்துள்ளார்.

அங்கு பரீட்சை எழுதும் 12 ஆயிரம் மாணவர்களுக்காக இந்த காகிதாதிகள் எடுத்துச் செல்லப்பட்டிருப்பதாகவும்—

வை மழையில் நனைந்து சேதமடைந்துள்ளதால் புதிதாக காகிதாதிகளை அனுப்பி அவர்கள் பரீட்சையில தோற்ற வசதி செய்யுமாறும்— அவர் மேலும் கேட்டுள்ளார்.

அதே நேரம்— முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைக்கப்பட்ட பரீட்சை நிலையங்கள் திடீரென மாற்றப்பட்டதால் மாணவர்களும் பரீட்சை மேற்பார்வையாளர்களும் புதிய இடங்களைத் தேடி அலைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-164-3)

உள்ளூராட்சி சபைகளின் ஆயுட்காலம் நீடிக்கப்படும்?

கொழும்பு, டிச. 15

எதிர்வரும் மார்ச் மாதத்தில் அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான திட்டம் குறித்து மக்கள் கருத்துக் கணிப்பை மேற்கொள்ள அரசு உத்தேசித்திருப்பதால் அடுத்த ஜூன் மாதத்துடன் ஆயுட்காலம் முடிவடையவுள்ள உள்ளூராட்சி சபைகளின் ஆயுட்காலத்தை ஒரு வருடம் நீடிக்க அரசு ஆலோசித்துள்ளதாகத் தெரியவருகிறது..

தற்போதுள்ள அரசமைப்பின்படி உள்ளூராட்சி சபைகளின் ஆயுட்காலத்தை நீடிக்கும் அதிகாரம் உள்ளூராட்சி அமைச்சருக்கு இல்லாத படியால், சபைகளின் ஆயுட்காலத்தை நீடிப்பதாயின் உள்ளூராட்சி சபை சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மக்கள் கருத்துக் கணிப்பைத் தொடர்ந்து உடனடியாக மற்றுமொரு தேர்தலை நாடு சந்திப்பது கடினம் என்பதாலும் பெரும்பாலான உள்ளூராட்சி சபைகளின் அதிகாரம் ஐ. தே. கட்சியிடம் இருப்பதாலும் அரசின் இந்த முயற்சிக்கு ஐ. தே. கட்சி ஒத்துழைப்பை வழங்கும் என எதிர்பார்க்கப்படுவதாக 'ராவய' பத்திரிகை தெரிவித்துள்ளது. (ஐ-10)

நாடு முழுவதும் புடைவை விநியோகத்தில் முன்னணி ஸ்தாபனமான

சலுசல Salu Sala

லங்கா சலுசல லிமிட்டெட்

மகிழ்ச்சியுடன் வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருவதாவது நத்தார், புது வருடத்தை முன்னிட்டு வரவு செலவுத் திட்டத்திற்கமைந்த விலைக் குறைப்புடன் அனைவருக்கும் 5% விலைக்கழிவும் ப. நோ. கூ. சங்கங்களுக்கு மட்டும் 7½% விலைக் கழிவும் வழங்கப்படும் என்பதாகும். இந்த அரிய சந்தர்ப்பம் 31 - 12 - 97 வரையாகும்.

★ கையிருப்பில் புதிய புடைவை வகைகள் உண்டு; ஏனைய புதியவை மிக விரைவில்.

லங்கா சலுசல லிமிட்டெட்

19, 20 மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். (51814)

5 ஆம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு: 29 — 10 — 1905

இறப்பு: 10 — 12 — 1992

Late Mr. T. S. Thuraiappah c, c. s.

(Rtd. O. A. - Kachcheri - Jaffna)

திதி: 15 - 12 - 97

எமது அருமைத் தந்தையாரை எம்றும் மறவோம்.

குடும்பத்தினர்

திருமதி வடிவாம்பிகை இந்திரராசா

"செல்வம்" (மகள்)
உரும்பிராய். (51799)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயேச்சைக் குழுக்களை நிறுத்த பொ.ஐ. முன்னணி ஆலோசனை

கொழும்பு, டிச. 15

யாழ். மாவட்ட உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பொது மக்கள் ஐக்கிய முன்னணி சுயேச்சைக் குழுவாக வேட்பாளர்களை நிறுத்துவது குறித்து ஆராய்ந்து வருகின்றது.

இது தொடர்பாக கடந்த வியாழனன்று விவசாய அமைச்சில் பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் அமைச்சர் ஜயரட்ன தலைமையில் ஆலோசனைக் கூட்டமொன்று நடைபெற்றது.

இக் கூட்டத்தில் பொது மக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் பொதுச் செயலாளர்களும், யாழ்.மாவட்ட ஆளும்கட்சிப் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

யாழ். மாவட்டத்தின் தற்போதைய சூழ்நிலையில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி சுயேச்சைக்குழுவாக போட்டியிடுவதுதான் பொருத்தமானது எனகட்சிச் செயலாளர்கள் வலியுறுத்தியுள்ளார்கள் எனத் தெரியவருகின்றது.

இது குறித்து நாளை செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி நாடு திரும்பிய பின்பு இறுதி முடிவு எடுப்பது என்றும் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. (ஐ-21)

வீட்டின் தட்டிகளைப் பிரித்து நள்ளிரவில் துணிகரத்திருட்டு

அச்சுவேலியில் பணம், நகை அபேஸ்

அச்சுவேலி, டிச. 15

அச்சுவேலி வடக்கில் ஒரு வீட்டில் நள்ளிரவில் வீட்டின் தட்டிகளைப் பிரித்து நகைகள், பணம் என்பன களவாடப்பட்டன.

வீட்டின் தட்டிகளைப் பிரித்து உட்புகுந்த திருடர்கள் இறங்குப் பெட்டிகளில் வைக்கப்பட்டிருந்த 40 பவுண் நிறை உள்ள நகைகளையும் ஆயிரத்து 500 ரூபா பணத்தையும் திருடியுள்ளனர்.

தாலிக்கொடி, காப்புகள், சங்கிலிகள் உட்பட நகைகளையும் பணத்தையும் திருடியவர்கள் இறங்குப் பெட்டிக்குள் இருந்த உடுப்புக்களையும் மற்றும் ஆவணங்களையும் மழையில் வீசி விட்டுச் சென்றனர். (ஐ-11)

உடுத்துறை, வத்திராயன் பகுதிகளில் குடியேற அனுமதி

வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள உடுத்துறை, வத்திராயன் பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

முன்னர் சுற்றிவர முட்கம்பி வேலி இட்டு மக்கள் செல்வது தடை செய்யப்பட்டு இப்பகுதி இராணுவ சூனியப் பிரதேசமாக விளங்கியது. தற்போது அவை அகற்றப்பட்டு மக்கள் செல்ல திறந்துவிடப்பட்டுள்ளது.

மருதங்கேணிப் பகுதிவரையுமே மக்கள் முன்னர் மீளக்குடியேற அனுமதிக்கப்பட்டனர்

தற்போது உடுத்துறை வரை மக்கள் மீளக்குடியேற அனுமதி வழங்கப்பட்டுள்ள போதிலும் இப்பகுதியில் மீளக்குடியேற மக்கள் பின் நிற்பதாகத் தெரிகிறது.

இப்பகுதி வீடுகளின் கதவுகள், ஓடுகள், யன்னல்கள் எல்லாம் கழற்றப்பட்டுள்ளதோடு பயன்தரு மரங்கள் எல்லாம் தறிக்கப்பட்டு விட்டன. அத்துடன் இப்பகுதியில் மிதிவெடிகள் அகற்றப்படவில்லை.

மிதிவெடிகள் அகற்றப்பட்டு பாதுகாப்பு உறுதி செய்த பின்னரே மக்கள் இப்பகுதியில் மீளக்குடியேற முன்வருவர் என அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-36)

நீர் விநியோகம் தொடர்பான ஆலோசனைக் கூட்டம்

வடமராட்சி, டிச. 15

ஜீ.ரி.இசட் ஜேர்மன் நிறுவனத்தின் உதவியுடன் நீர் விநியோகத் திட்டத்தை மேற்கொள்வது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஒன்று கரவெட்டி பிரதேச செயலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

வல்வெட்டித்துறை, கரவெட்டி, அத்துளுகன் பொல்லை, புத்தூர், வாதரவத்தை. நாவற்குழி ஆகிய நீர் விநியோகத்திட்டங்களில் மேற்கொள்ளப் பட வேண்டிய புதியதிட்டங்கள் குறித்து இந்த ஆலோசனைக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது.

கரவெட்டி பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் தலைமையில் இக்கூட்டம் நடைபெறவுள்ளது. (ஐ 173)

விண்ணப்பங்கள் திரும்பின

தென்மராட்சி, டிச. 15

தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்த பளைப் பகுதியைச் சேர்ந்த பலரின் விண்ணப்பங்கள் கொழும்பு ஆள்பதிவுத் திணைக்களத்திலிருந்து திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

விண்ணப்பத்துடன் அனுப்பப்பட்ட பிறப்புச் சான்றிதழில் மாவட்டப் பெரும்பாகப் பதிவுகாரர் சிவப்புமைப் பேனாவினால் கையொப்பமிட்டதை ஏற்றுக் கொள்ளமுடியாது எனவும், புதிய பிறப்புச் சான்றிதழ் இணைத்து அனுப்பு மாறும் கோரியே விண்ணப்பங்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன. (ஐ-117)

'ஆத்மராகம்' தெருக் கூத்து

குருநகர், டிச. 15

யூபிலிஆண்டை முன்னிட்டு யாழ். திருமறைக் கலாமன்றம் ''ஆத்மராகம்'' எனும் தெருக்கூத்து நாடகத்தை இம்மாதம் 20 ஆம் திகதி முதல் யாழ் மறைவட்டத்திலுள்ள ஒவ்வொரு பங்கிலும் நடத்த உள்ளது. (ஐ-57)

குடத்தனை, செம்பியன்பற்று நூலகங்களுக்கு புத்தகங்கள்

மருதங்கேணி பிரதேச செயலகத்தின் 1997 ஆம் ஆண்டு பிரமாண அடிப்படையிளான மூலதன அபிவிருத்தி நிதியில் இருந்து குடத்தனை பொதுசன நூலகத்திற்கு 30, ஆயிரம் ரூபா- பெறுமதியான நூல்களும், செம்பியன்பற்று பொதுசன நூலகத்திற்கு 25,ஆயிரம் ரூபா-பெறுமதியான நூல்களும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் இந் நிதியிலிருந்து இவ்விரு நூலகங்களுக்கும் மேலும் ஒரு தொகுதித் தளபாடங்களும் கிடைத்துள்ளன.

நூல்கள், தளபாடங்கள் புதிதாக கிடைத்தமையின்றால் நூலகங்களின் தளபாட வசதி அதிகரித்துள்ளது, வாசகர்களுக்கு பயன்தரும் நூல்கள் பலகிடைத்துள்ளன. (ஐ-171)

குடும்பநல சேவையாளர் இருவர் மட்டுமே தெரிவு

திருநெல்வேலி, டிச. 15

மாணவ குடும்ப நலசேவையாளர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை கடந்த 10 ஆம் திகதி யாழ். அரசினர் போதனா வைத்திய சாலையில் நடை பெற்றது. அதில் 2 பேர் மட்டுமே சித்தியடைந்து தெரிவு செய்யப்பட்டனர். இந்த நேர்முகப்பரீட்சைககு 34 பேர் அழைக்கப்பட்டிருந்த போதிலும் 23 பேரே சமுகமளித்திருந்தனர். அவர்களில் இப்பதவிக்குத் தேவையான கல்வி மற்றும் தராதரங்களையுடைய இருவரே தெரிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவந்தது. (ஐ-135)

வடமராட்சி கிழக்கிற்கு யூரியா கிடைக்கவில்லை

வடமராட்சி கிழக்கில் உள்ள 5 கமக்காரர் அமைப்புக்கள் யூரியா உரம் பெறுவதற்கான பரப்பளவிற்குரிய விவரப் பட்டியலை அனுப்பியுள்ள போதிலும் இப்பகுதி விவசாயிகளுக்கு இது வரை யூரியா உரம் வழங்கப்படவில்லை.

இதனால் நெல் வளர்ச்சி குன்றுவதாகவும் காலந்தாழ்த்தி உரம் கிடைப்பதால் பயனில்லை என்றும் கமக்காரர் அமைப்புக்கள் கவலை வெளியிட்டன. (ஐ-36)

வீதிகளை செப்பனிடும் பணி 'றோலர்' இல்லாததால் பாதிப்பு

யாழ்ப்பாணம், டிச 15

கோப்பாய் கிருஷ்ணன் கோவில் சந்தியிலிருந்து நீர்வேலி வரையிலான இராச வீதிப் பகுதியினைத் திருத்தி அமைப்பதற்கென கடந்த எட்டு மாதங்களுக்கு முன் வீதியோரமாக கல் பறிக்கப்பட்டும் இதுவரை வீதி திருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை.

வீதி திருத்துவதற்கென போதிய தார் இருப்பதாகவும் 'றோலர்' பற்றாக்குறையினாலேயே இப்பணியைத் தொடங்க முடியாதுள்ளதாகவும் வீதி அபிவிருத்தித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒரேயொரு 'றோலர்' மட்டுமே பாவனையில் உள்ளதால் அதனைப் பயன்படுத்தியே வடமராட்சி, வலிகாமம் பகுதியிலுள்ள வீதிகளைத் திருத்த வேண்டியுள்ளது. இதனாலேயே காலதாமதம் ஏற்படுகின்றது.

'றோலர்' பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய திருகோணமலையிலுள்ள வடக்கு—கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக்கள உயரதிகாரிகள நடவடிக்கை எடுத்தால் வீதிகளை செப்பனிடும் பணியை துரித கதியில் மேற்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

விறக்கு பனை

குருநகர், டிச. 15

குருநகர் பகுதியில் விறகுத் தேவைக்காக தென்னை, பனைமரக்குற்றிகள் பெரும் அளவு பாவிக்கப்படுகின்றன. மூன்று அடி நீளமான குற்றி 60 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. (இ-51)

உருளைக்கிழங்கு பயிர்ச் செய்கையாளர்கள் கவனத்தில் எடுக்க வேண்டிய முக்கிய விடயங்கள்

குடாநாட்டில் உருளைக் கிழங்குச் செய்கை ஆரம்பமாகியுள்ளது. ''1997-98 ஆம் ஆண்டு உருளைக் கிழங்குபயிர்ச்செய்கையாளர் கவனத்துக்குரிய முக்கியவிடயங்கள்'' என்ற தலைப்பில் யாழ். உதவிவிவசாயப்பணிப்பாளர் த. கிவலோகநாதன் விடுத்த பத்திரிகைக் குறிப்பின் முதற் பகுதி கடந்த வெள்ளியன்று உதயனில் வெளியானது. அதன் இறுதிப்பகுதி இங்கே பிரசுரமாகிறது.

★ கொறவணவன், நெருப்பெறும்புத் தாக்கத்தைக் கட்டுப்படுத்த 1000 கண்டுத் தரைக்கு 2—4 சிலோ பியுறடான் குறுணலை சால்களுக்குள் இடவும். அல்லது குளோரோபைரிபொஸ் என்னும் கிருமிநாசனியை 1 அவுன்ஸ்/ 1 - 1½ கலன் நீரில் கலந்து சால்களை நனைக்கவும். 1000 கண்டு தரைக்கு 400 மில்லி லீற்றர் கிருமிநாசனி தேவையானதாகும்.

★ தரம் பிரித்த கிழங்குகளில் சிறிய கிழங்குகளை (28-35 மி மீ.) 10''-12'' இடைவெளிகளிலும்—

நடுத்தர கிழங்குகளை (35-45 மி.மீ.) 15'' - 18'' இடைவெளிகளிலும்—

பெரிய கிழங்குகளை (45-55 மி. மீ.) 20'' - 24'' இடைவெளிகளிலும்—

2 அடி இடைவெளியில் தயார் செய்யப்பட்ட சால்களில் வைக்கவும்.

★ சாலுக்கருகில் உள்ள மண்ணை எடுத்துச் சாலைச் சாய்வான புருவம்போல் ஆக்கவும். அல்லது சாலில் குறிப்பிட்ட இடைவெளியில் கிண்டி கிழங்கின் மேல் 1-1½ அங்குலம் மண் இருக்கத்தக்கதாகத் தாழ்க்கவும்.

★ தரையின் தன்மையைப் பொறுத்து நீர்ப்பாசனத்தை மேற்கொள்ளவும்.

★ நாட்டி 15-20 நாள் பருவத்தில் களைகளை அகற்றி இலேசாக மண் அணைக்கவும்.

★ நாட்டி 30-35 நாள் பருவத்தில் இரண்டாம்முறை களையகற்றிச் சிறந்த முறையில் மண் அணைக்கவும்.

★ 2 ஆம் முறை மண் அணைத்து நீரிறைக்க ஆரம்பிக்கும் போது 1000 கண்டுத் தரைக்கு மியுறியேற் ஒவ் பொற்றாஸ்-12.5கி.கி. அமோனியம் சல்பேற் - 36சி சி அல்லது யூரியா 18 கிலோ அல்லது 50 கிலோ ரி. டி. எம் கலவையை மேற்கட்டுப் பசளையாக இடவும்.

உருளைக்கிழங்கில் பீடை நோய்க் கட்டுப்பாடு:

★ பனிப்பூச்சி: பென்தயன் (லெபேசிட்) அல்லது காபரில் (செவின்) 1 அவு. 3 கலன் நீரில் கலந்து பயிர் நன்கு நனைய விசிறவும்.

★ அழுக்கணவன்: டைம்தோயேற் அல்லது ஒக்சிடெமடோன்மீதையல் (மெட்டாசிஸ்டொக்ஸ்) 1 அவு, - 3 கலன் நீரில் கலந்து பயிர் நனைய விசிறவும்.

★ கிறறுண்ணி: மழை காலம் முடிந்து வெயில் காலம் தொடங்குகையில் இதன் தாக்கம் அதிகரிக்கும், இதைக்கட்டுப்படுத்த திரவ சல்பர் அல்லது சல்பர் தூள் 1½ அவு. 3 கலன் நீரில் கலந்து இலைகளின் கீழ்ப்புறம் நன்கு நனையும்படி விசிறுதல் அவசியமாகும்.

தாக்கம் அதிகரிப்பின் ஒக்சிதையோகுயின்ஸ் (மொரஸ்டான்) 1 அவு. 6 - 10 கலன் நீரில் கலந்து இலைகளின் கீழ்ப்புறம் நன்கு நனைய விசிறவும்.

★ எபிலக்ன: வண்டின் தாக்கம் காணப்படின் ரைகுளோர்பொன் (டிப்ரெக்ஸ்) 1 அவு. - 3 கலன் நீரில் கலந்து விசிறவும்.

★ இலைகருகல்: முற்கூற்று/ பிற்கூற்று வெளிறல் உருளைக்கிழங்கைத் தாக்கும் முக்கிய நோயாகும். இந்நோயைக் கட்டுப்படுத்த மன்கோசெப், கப்டான், டகோனில், அன்றகோல் ஆகிய பூஞ்சணநாசனிகளில் ஏதாவது ஒன்றை 1 அவு. - 2½ கலன் நீரில் கலந்து இலைகளின் மேற்புறம், கீழ்ப்புறம் நன்கு நனைய விசிறவும் தாக்கம் கூடுமாயின் ரிடோமில் எம் இசற் 72 என்ற பூஞ்சணநாசனியை 2 அவு. - 3 கலன் நீரில் கலந்து விசிறவும். ஆனால் ஒரே ஒரு முறை மட்டும் விசிறினால் போதுமானதாகும்.

★ இலைச்சுரங்க மறுப்பி: கடந்த சில வருடங்களாக இப்பீடையின் தாக்கத்தைப் பல பயிர்களில் அவதானிக்க முடிந்தது. முக்கியமாக உருளைக்கிழங்குப் பயிரிலும் இதன் தாக்கம் கூடுதலாகக் காணப்பட்டது. எனவே இப்பயிரில் இதன் தாக்கத்தைக் கட்டுப்படுத்த ஆரம்பத்தில் இருந்தே டைமீதோயேற் அல்லது டிப்றெக்ஸ் மருந்துகளில் ஏதாவது ஒன்றை விசிறிக் கட்டுப்படுத்தவும்.

இப்பயிர்ச்செய்கையின் போதுவிவசாயிகளால் தீர்க்க முடியாத பிரச்சினை ஏற்படின் உடனடியாக உங்கள் பகுதி விவசாயப்போதனாசிரியருடன் அல்லது மாவட்ட உதவிவிவசாயப்பணிப்பாளர் அலுவலகத்துடன் (திருநெல்வேலி) தொடர்பு கொள்ளவும்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நூலகம்

உதயன்

களுத்துறைக் கொலைகள்

களுத்துறைச் சிறைச்சாலையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற கைதிகளின் கலகத்தையும், தமிழ்க் கைதிகளின் கொலைகளையும் வெறும் சம்பவங்களாக மட்டும் கொள்ள முடியாது.

இந்தக் கைகலப்பு திட்டமிடப்பட்ட ஒன்று; தமிழ்க் கைதிகள் மீது ஏவிவிடப்பட்டது; சிறையில் மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டிருந்த பொலீஸ், இராணுவம் உட்பட அரச அதிகாரிகளின் ஆசீர்வாதத்துடன் நடைபெற்றது என்பது நன்கு புலனாகிறது.

தமிழர்களை, அவர்கள் அரசாங்கத்தின் பொறுப்பிலுள்ள கைதிகளாக இருக்கும் வேளையில் கூட அரசினால் பாதுகாக்க முடியவில்லை.

பொதுவாக நோக்கினும் தமிழர்கள் மீதான இந்தக் கொடுமைக்கு அரசாங்கமே பொறுப்பு ஏற்க வேண்டும். இந்தக் கொலைகளுக்கான சூழலை உருவாக்கிய வகையிலும் அரசே முழு முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும். வேறு எந்த வகையிலும் சமாளிக்கவோ பூசி மெழுகவோ முயலக் கூடாது.

களுத்துறைச் சிறையில் தாக்கப்பட்ட தமிழ்க் கைதிகளை மகசின் சிறையிலிருந்து இடம் மாற்றியது அரசாங்கமே.

தமது நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதமிருந்த கைதிகள் கூரையில் அமர்ந்திருந்தார்கள் என்பதற்காக, நான்காம் நாள் பலவந்தமாகக் களுத்துறைக்குக் கூட்டிச் செல்லப்பட்டனர். சாத்விகப் போராட்டத்துக்கு அளிக்கப்பட்ட தண்டனை அது!

உண்ணாவிரதம் இருந்தவர்களின் கோரிக்கைகள் உருட்கணக்காகத் தீர்க்கப்படாதவை. மிக நியாயமானவை இம்முறையேனும் கோரிக்கைகளை நிறைவேற்ற அக்கறை காட்டாமல், தொல்லை எனக் கருதியே இடம் மாற்றப்பட்டார்கள்.

ஆகையால், கலவரத்துக்கும், கொலைகளுக்கும் நூறு வீதமும் அரசே பொறுப்பேற்க வேண்டும்!

களுத்துறைச் சம்பவமானது, பதினான்கு வருடங்களுக்கு முன்னர் வெலிக்கடைச் சிறைச்சாலையில் நடைபெற்ற 53 தமிழ்க் கைதிகளின் கொடூரக் கொலைகளையே ஞாபகப்படுத்துகின்றன; ஒரு வகையில் அவற்றை ஒத்திருக்கின்றன எனலாம்.

தமிழர்கள் உரிமைகள் கேட்கத் தகுதியற்றவர்கள்; அடிமைகளாகவே வாழ வேண்டியவர்கள்; அதனை மிஞ்சித் தலை எடுக்க முயன்றால் அவர்களை அடிக்க வேண்டும் என்ற மேலாண்மைத் தனம் சிங்களத் தலைவர்களிடம்மட்டும் இல்லை. சிறைக் கைதிகள் மட்டம் வரை வேருன்றி உள்ளது. களுத்துறைக் கலகமும், கொலைகளும் அதனையே எடுத்துச் சொல்கின்றன.

பதினான்கு வருடங்கள் கழிந்தும் சிங்கள — தமிழ் இனப் பகைமை, இனத்துவேஷம் மறையவில்லை; மாறவில்லை.

தமது நியாயமான உரிமைகளைக் கேட்கிறார்கள் என்பதற்காக, போர் என்ற போர்வையில், அப்பாவித் தமிழ் மக்கள் ஆயிரக் கணக்கில் கொல்லப்பட்டனர்; தொடர்ந்தும் அது நடைபெறுகிறது.

அதனால் தமிழர்களைக் கொல்லலாம், தாக்கலாம், சித்திரவதை செய்யலாம், துன்புறுத்தலாம் என்ற எண்ணம் சிங்கள மக்களின் மேல் மட்டத்திலிருந்து கைதிகள் போன்ற அடிமட்டம் வரை ஊறிப் போய் உள்ளது. போர் அந்த எண்ணத்தை மேலும் வளர்க்கிறது.

போரை நிறுத்துவதற்கான ஆக்கரீதியான அர்த்தமுள்ள செயற்பாடுகளில் அரசு காலந் தாழ்த்தாமல் ஈடுபட்டால் மட்டுமே இனத் துவேஷப் போக்கில் ஓரளவிலேனும் திருத்தத்தை எதிர்பார்க்கலாம்.

எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் நடைபெறவுள்ள

ஆசிரியர் தெரிவை ஆட்சேபித்து பட்டதாரிகள் சங்கம் அறிக்கை

யாழ்ப்பாணம், டிச 15

எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதிவரை யாழ். மாவட்டத்தில் ஆசிரியர்களை நியமிப்பதற்காக நடத்தப்படவிருக்கும் நேர்முகப் பரீட்சையை ஆட்சேபித்து யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

யாழ்.மாவட்டத்தில் ஆசிரியர்களை நியமிப்பதற்காக எதிர்வரும் 19ஆம்திகதி முதல் 23ஆம் திகதி வரை நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சையைத் தடுத்து நிறுத்துவதென யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

ஆசிரியர் நியமனத்தில் வேலையற்ற பட்டதாரிகளுக்கும் கணிசமான அளவு நியமனத்தை வழங்குமாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர், வடக்குகிழக்கு மாகாணசபைக் கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோரிடம் பலமுறை வேண்டுகோள் விடுத்திருந்த போதிலும்இது வரை ஆக்கபூர்வமானபதில் எதுவும் எமக்குத் தரப்படவில்லை.

இதேவேளை கல்வி சேவை ஆணைக்குழுவினால் தரப்பட்ட பட்டியல் என்ற அடிப்படையில் வடக்கு—கிழக்கு மாகாணசபையின் கல்வித்துறை அதிகாரிகள் நடத்தும் நேர்முகப் பரீட்சையும், நியமனங்களும் செல்வாக்குக் கலாசாரமும் ஊழலும் நம் மண்ணில் தலைவிரித்து ஆடுகிறது என்பதையே காட்டுகிறது.

கல்விச் சேவை ஆணைக்குழு என்ற பெயரில் பூச்சாண்டி காட்டி விட்டுக் கடந்த 4 வருடமாக வேலையற்று இருக்கும் பட்டதாரிகளுக்கு செய்யும் துரோகத்தனத்தைச் சங்கம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. எனவே தான் எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறவுள்ள நேர்முகப்பரீட்சையை தடுத்து நிறுத்துவது என யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது. இத்தீர்மானம் நேர்முகப் பரீட்சையில் தோற்றவுள்ளவர்களுக்கு எதிரானது அல்ல. இது எமது உரிமைப் பிரச்சினை.

இதனைக் கருத்திற் கொண்டு உரிய அதிகாரிகள் ஆக்கபூர்வமான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். மாறாக பட்டதாரிகளின் நியாயபூர்வமான கோரிக்கைகள் உதாசீனம் செய்யப்படுமாயின் நடைபெறும் ஆர்ப்பாட்டங்களுக்கும் அதனால் ஏற்படும் விரும்பத் தகாத விளைவுகளுக்கும் வடக்குக் கிழக்கு மாகாண சபையின் கல்வித் துறை அதிகாரிகளே முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும்.

நேர்முகப் பரீட்சையைத் தடுப்பது பற்றிய செய்தி "பக்ஸ்" (Fax)மூலம் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும் வடக்குக் கிழக்கு மாகாண சபை கல்வி அமைச்சின் செயலாளருக்கும் உடனடியாக அனுப்பி வைக்கப்படவுள்ள தோடு நேர்முகப் பரீட்சையைத் தடுத்து நிறுத்தும் ஒழுங்கை மேற்கொள்ளும் பொருட்டு சங்கத்தின் செயற்குழு மிக விரைவில் கூடவுள்ளது என்று உள்ளது.

(ஐ)

கொழும்பில் கம்பன் கழக நிகழ்ச்சி

கொழும்புக் கம்பன் கழகம் நடாத்தும் "ஸ்ரீராமநாம கானாமிர்தம்" இசைவேள்வி நிகழ்ச்சி இன்று முதல் தொடர்ந்து ஒன்பது தினங்கள் வெள்ளவத்தை ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெறும்.

இலங்கையின் பிரபல இசைக்கலைஞர்கள் பலரும் இதில் கலந்து கொண்டு இசை அமுதம் வழங்குவர்.

(இ-7)

தெல்லிப்பழைக் கல்விக்கோட்ட அலுவலகம்

தெல்லிப்பழை கல்விக் கோட்ட அலுவலகம் இன்று திங்கள் முதல் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் உள்ள தனியார் வீடொன்றில் இயங்கிவருகிறது.

இந்த அலுவலகம் காங்கேசன்துறை வீதியில், வலி. வடக்கு பிரதேச செயலகத்தின் வடக்குப் பக்கமாக, 300 மீற்றர் தூரத்தில், பிரதான வீதிக்கு மேற்குப் பக்கத்தில் அமைந்துள்ளது.

இவ்வளவு காலமும் இந்த அலுவலகம் உடுவில் மானிப்பாய் வீதியில் தனியார் வீடு ஒன்றில் இயங்கிவந்தது.

களுத்துறைத் தாக்குதல் சம்பவம்

மரண விசாரணையின் போது சாட்சியமளிக்க கைதிகள் மறுப்பு

கொழும்பு, டிச. 15

களுத்துறை சிறைச்சாலை தமிழ்க் கைதிகள் கொலை தொடர்பான மரண விசாரணையில் சகதமிழ்க் கைதிகள் இருவர் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கமறுத்து விட்டனர்.

நேற்று முன்தினம் காலை களுத்துறை நீதி மன்றத்தில் பதில் நீதிபதி பந்துல வீர சிங்க முன்னிலையில் மரண விசாரணை நடைபெற்றது.

சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், சிங்கள கைதிகள், சட்டவைத்திய அதிகாரி உட்பட 7 பேர் சாட்சியமளிக்க ஆஜர் செய்யப்பட்டனர்.

சாட்சியமளிக்க ஆஜர்செய்யப்பட்ட தமிழ்க் கைதிகள் "சம்பவம் குறித்து இந்த நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க முடியாது. நாம்கண்ணால் கண்டவற்றை கூறுவதென்றால் வேறு சிறைச்சாலைக்கு எம்மை மாற்ற வேண்டும்" என்ற நிபந்தனை விதித்து சாட்சியமளிக்க மறுத்து விட்டனர்.

சட்டவைத்திய அதிகாரி டாக்டர் டி.எல். விஜேசிங்க தனது அறிக்கையில் "கனமான பொருளால் தலையில் தாக்குதல் இடம் பெற்றுள்ளது. அதிர்ச்சி, மூளை சிதைவுகளினால் மரணம் ஏற்பட்டது" எனத்தெரிவித்தார்.

இம் மரணங்கள் கூட்டுக் கொலைகள் என்றும் சந்தேக நபர்களைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறும் பதில் நீதிபதி பொலீஸாரைப்பணித்தார்.

(இ-21)

சுதந்திர பொன்விழா

நெல்சன் மண்டேலா இலங்கை வரமாட்டார்

கொழும்பு, டிச. 15

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி நடைபெறும் இலங்கையின் 50 ஆவது சுதந்திர பொன் விழாவில் தென் ஆபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா கலந்து கொள்ளமாட்டார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இதற்கான அழைப்பை அவருக்கு அனுப்பியிருந்தார்.

அச்சமயம் ரஷ்யாவுக்கு விஜயம் செய்வதால் இலங்கைக்கு வரமுடியாதுள்ளதாக மண்டேலா அறிவித்துள்ளார்.

சுதந்திர பொன் விழாவில் இளவரசர் சார்ள்ஸ் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார் எனத் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

பாவனைக் காலம் முடிந்த 261மீன் ரின்கள் பறிமுதல்

சாவகச்சேரிச் சந்தையில்

சாவகச்சேரி, டிச. 15

சாவகச்சேரி பொதுச்சந்தையின் உட்பகுதி வர்த்தக நிலையங்களில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பாவனைக் காலம் முடிந்த – பாவனைக்குதவாத ரின் மீன்கள் சாவகச்சேரி நகர சுகாதார பரிசோதகர் எஸ். கிளின்ரஸ்கினின்திடீர்ச் சோதனையின் போது கண்டு பிடிக்கப்பட்டன.

கடந்த வெள்ளியன்று மேற்கொள்ளப்பட்ட இச் சோதனையின் போது 261 மீன்ரின்கள் பறிமுதல் செய்யப்பட்டு சாவகச்சேரி நகரசபை அலுவலகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன.

(ஐ-31)

மட்டக்களப்பில் ஓட்டோ குண்டு வெடிப்பு;

தந்திச்சேவகர் முன்னர் புலிகள் இயக்கத்திலிருந்தவராம்

மட்டக்களப்பு, டிச. 15

மட்டக்களப்பு ஓட்டோ குண்டு வெடிப்புச் சம்பவத்தில் கொல்லப்பட்ட பொன் ராஜா பிரான்சிஸ் சதீஸ் என்ற தந்திச் சேவகர் விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து விலகி 1990 ஆம் ஆண்டு சரண் அடைந்தவர் என விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளதாம்.

இவர் தபால் நிலையத்திலிருந்து புறப்பட்ட சைக்கிள் இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை.

இந்தச் சம்பவம் குறித்து தபால் ஊழியர்கள் சிலரும் பொலீஸாரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டார்கள்.

மட்டக்களப்பு சிரேஷ்ட பொலீஸ் சுப்பிரின்டனுக்கு முகவரியிடப்பட்ட தந்தி ஒன்றை இவர் கொண்டு சென்ற சமயம் ஓட்டோவுக்குள் இருந்து வெடித்த குண்டு காரணமாக இவரும் ஓட்டோ சாரதியும் கொல்லப்பட்டது தெரிந்ததே.

தபால் நிலையத்திலிருந்து தந்தியுடன் சைக்கிள் ஒன்றில் புறப்பட்ட இவர் இடையில் சைக்கிளைக் கைவிட்டு ஓட்டோவில் ஏறிச் சென்ற சமயமே குண்டு வெடித்தது.

(இ-21)

குண்டு துளைக்காத 2கார்கள் கொழும்புத் துறைமுகம் வந்தன

கொழும்பு, டிச. 15

பல கோடி ரூபா பெறுமதியான குண்டு துளைக்காத 2 பென்ஸ் கார்களும், பி. எம். டபிள்யூ ரகத்தைச் சேர்ந்த 3 உல்லாச சொகுசு கார்களும் கடந்த வாரம் கொழும்புத் துறைமுகத்துக்கு வந்த கப்பலொன்றில் எடுத்து வரப்பட்டன.

"லூட் விக்ஸ்பன் எக்ஸ்பிரஸ்" என்ற கப்பலில் கொள்கலன்களில் கொண்டுவரப்பட்ட இந்தக் கார்களில் குண்டு துளைக்காத பென்ஸ் ரக கார்கள் இரண்டும் அன்று இரவே விசேட பணிப்பின் பேரில் துறைமுகத்திலிருந்து வெளியே கொண்டு செல்லப்பட்டன.

பொருள்கள் துறைமுகத்துக்கு வெளியே கொண்டு செல்ல அனுசரிக்கப்பட வேண்டிய வழமையான வழிமுறைகள் எவையும் அனுசரிக்கப்படாமல் இந்த இரு கார்களும் வெளியே கொண்டு செல்லப்பட்டன. எனவும், பாதுகாப்புக் காரணங்கள் கருதியே இவ்வாறு செய்யப்பட்டது எனவும் சுங்கத்துறையைச் சேர்ந்த சிலர் தெரிவித்ததாக "திவயின" பத்திரிகை தெரிவித்துள்ளது.

(ஐ-10)

நாளை

மார்கழி 1

செவ்வாய்க்கிழமை

நிதி துதியை

முற்பகல் 7.55 வரை

நட்சத்திரம் புனர்பூசம்

பின்இரவு 1.04 வரை.

சுபநேரம் 10.52-12.22

ராகுகாலம் 3.22-4.52

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்)

மாறு கோரினர்.

இதுவரை நடந்த நான்கு கட்ட விசாரணைகளும் பளாலியிலேயே நடந்தன.

நேற்றைய இறுதிக்கட்ட விசாரணை யாழ். செயலகத்தில் இடம்பெற்றது.

நேற்று 27 பேரின் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன. (இ-3-7)

சடலங்களை...

(முதலாம் பக்கத் தொடர்)

கிருஷ்ணன் — திருக்கோயில்.

★ ரத்தினம் தனபாலசிங்கம் — ஊர்காவற்றுறை.

★ பகபதிப்பிள்ளை சேந்திரன் — உருத்திரபுரம்.

★ முருகமூர்த்தி திலகேஸ்வரன் — களுவாஞ்சிக்குடி..

★ நாகமணி தெய்வேந்திரன் — மட்டக்களப்பு.

★ நல்லையா இராஜலிங்கம் — பழுகாமம்.

★ இளையதம்பி ஸ்ரீ சங்கரதாஸ் — மட்டக்களப்பு.

★ செல்வரட்ணம் குமணன் — யாழ்ப்பாணம்.

★ சிவப்பிரகாஷம் சொரூபன் — வவுனியா.

★ பஞ்சாட்சரம் செல்கோடன் — யாழ்ப்பாணம்.

★ இளையதம்பி சுதாகரன் — திருக்கோயில்.

★ அழகையா ரவிச்சந்திரன் — முள்ளியவளை.

★ விரப்பன் யோகராசா — யாழ்ப்பாணம்.

★ கே. சங்கரதாஸ் — கொழும்பு.

மேற்படி 18 பேர் தவிர செல்வரத்தினம் கருணாகரன் — கொடிகாமம்.

அச்சுதபிள்ளை பாலச்சந்திரன் — நீராவியடி ஆகியோர் நாகொட ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். (இ-21)

யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்)

தும் இதுதொடர்பாக ஆராய்வதென முடிவு செய்யப்பட்டதாகவும் — மொறுமக்கள் ஐக்கிய முன்னணி பொதுச் செயலாளரும், அமைச்சருமான டி. எம். ஜயரத்தின தெரிவித்தார்.

காங்கேசன் துறையைச் சேர்ந்த இன்னமுத்து என்பவரை வடமாகாண அமைப்பாளராக நியமித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேநேரம் — அரசில் அங்கம் வகிக்கும் லங்கா சமசமாஜக் கட்சி தேர்தலை வரவேற்று அறிக்கை வெளியிட்டுள்ளது.

முஸ்லிம் ஐக்கிய முன்னணி தேர்தலைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டுள்ளது.

உண்ணா...

(முதலாம் பக்கத் தொடர்)

வும்—

அதுவரை உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறும்—அவர்கள் உண்ணாவிரதிகளிடம் கோரினர்.

தம்மை அரசியல் கைதிகளாக தமது சொந்த இடங்களுக்கு அல்லது மகஸீன் சிறைக்கு மாற்றும்படியும்—மகஸீன் சிறைச்சாலையில் அரசியல் கைதிகளை மட்டுமே வைக்குமாறும்—உண்ணாவிரதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-21-3)

கூட்டணியின்...

(முதலாம் பக்கத் தொடர்)

யோகேஸ்வரனின் மனைவி சரோஜினி யோகேஸ்வரன் போட்டியிடவிருக்கிறார் என கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழர் விடுதலைக் கூட்டணி யாழ். மாநகர சபையுடன் ஏனைய சில பிரதேச சபைகளிலும் போட்டியிடும் எனத் தெரிவிக்கப்பட்டது.

மோட்டார்...

(முதலாம் பக்கத் தொடர்)

வர்கள் ஒரு மோட்டார் சைக்கிளை அங்கு விட்டுச் சென்றதாகவும் —

பின்னர் அவர்கள் மோட்டார் சைக்கிளை எடுக்க வராததையடுத்து நேற்று அந்தக் கடை உரிமையாளர் அந்த மோட்டார் சைக்கிளை அதிரடிப்படை முகாமுக்கு உருட்டிச் சென்றதாகவும் —

அந்த மோட்டார் சைக்கிளில் குண்டு பொருத்தப்பட்டிருப்பதைக் கண்ட படையினர் குண்டு செயல் இழக்கும் பிரிவின் உதவியுடன் குண்டைச் செயல் இழக்கச் செய்ததாகவும்— தெரிவிக்கப்பட்டது.

மக்கள் வங்கிக்கு முன்பாக குண்டு செயல் இழக்கச் செய்யப்பட்டதால் வங்கியின் முன்பக்கச் சுவர் சேதமுற்றது. (இ-21-14-3)

உண்ணாவிரத..

(முதலாம் பக்கத் தொடர்)

மனித கௌரவத்திற்கான அமைப்பு இணைப்பாளர் சட்டத்தரணி மகேஸ்வரி வேலாயுதம் உட்பட்பலர் கலந்து கொண்டனர்.

களுத்துறைச் சிறையில் தமிழ்க் கைதிகள் தாக்கப்பட்ட சம்பவத்தின் பின்னணி குறித்து ஆராய்ந்து பொறுப்பானவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் — களுத்துறைச்சிறைச்சாலையில் பாதுகாப்பு இல்லாததால் அவர்களை வேறு சிறைக்கு மாற்ற வேண்டும் என்றும் —தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்தனர்.

இதைத் தொடர்ந்து தமிழ்க்கட்சிப் பிரதிநிதிகள் உண்ணாவிரதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார்கள்

அதேசமயம் களுத்துறைச் சிறைச்சாலையில் தமிழ்க் கைதிகள் உண்ணாவிரதம் மேற்கொண்டிருப்பது தொடர்பாக ஆராய நேற்று இரவு நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் கொழும்பில் மாநாடு ஒன்றைநடத்தினார்.

இதிலும் தமிழ் அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

தமிழ் அரசியல் கைதிகளை மகஸீன் சிறைச்சாலைக்கு மாற்ற வேண்டும் என்றும் — அங்கு தமிழ்தெரிந்த அதிகாரிகளை நியமிக்க வேண்டும் என்றும் — ''புளொட்'' அமைப்பின் தலைவர் த. சித்தார்த்தன் இந்த மாநாட்டில் கோரிக்கை விடுத்தார்.

நிரந்தரமாக அவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். இல்லையேல் தொடர்ந்து இது போன்ற பிரச்சினைகள் எழும்' என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழ்க் கைதிகளின் பாதுகாப்பு தொடர்பாக மாநாட்டில் விரிவாக ஆராயப்பட்டது.

இதற்கிடையில் சட்ட மா அதிபர் திணைக்கள அதிகாரிகளும், சிறைச்சாலை அதிகாரிகளும் பங்குபற்றும் கூட்டம் ஒன்று இன்று நடைபெற விருக்கிறது. (இ-21-3)

ரயில் என்ஜின் கொள்வனவு:

அமெரிக்காவின் கேள்வி நிராகரிக்கப்பட்டது ஏன்?

இலங்கை அரசுக்கு அமெரிக்கா கடிதம்

கொழும்பு, டிச. 15

பல கோடி ரூபா பெறுமதியான 10 ரயில் என்ஜின்களைக் கொள்வனவு செய்யும் கேள்விப்பத்திர நடைமுறையில் இலங்கை அரசாங்கம் கடைப்பிடித்த நடைமுறை குறித்து விளக்கம் கோரி அமெரிக்க அரசு இலங்கை அரசுக்குக் கடிதம் அனுப்பியுள்ளது.

10 ரயில் என்ஜின்களை கொள்வனவு செய்ய இலங்கை அரசு கேள்விப்பத்திரம் கோரியது.

அமெரிக்க ஜெனரல் மோட்டோஸ் நிறுவனம், கொரிய சாம்சூன் நிறுவனம், பிரெஞ்சு அல்ஸ்ரோம் நிறுவனம் ஆகியன கேள்விகளைச் சமர்ப்பித்திருந்தன.

இந்தக் கேள்விகளை ஆராய்ந்த திறைசேரி அதிகாரிகள் அமெரிக்க நிறுவனத்தின் ரயில் என்ஜின்கள் தரமானவை என பொர்சு செய்து அந்த நிறுவனத்துக்கு கட்டளை அனுப்ப முடிவு செய்தது.

இந்த விடயத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலையிட்டதை அடுத்து பிரெஞ்சு நிறுவனத்துக்கு கொள்வனவுக்குக் கட்டளை அனுப்பப்பட்டது.

பிரெஞ்சு நிறுவனம் கேள்விப்பத்திரத்தில் சமர்ப்பித்த என்ஜின்கள் கப்பலுக்குப் பாவிப்பன என்றும்—

அவை ரயிலுக்கு பாவிப் பவை அல்ல என்றும்—தெரிவிக்கப்பட்டது. (இ-8-10)

அரசியல்வாதி....

(முதலாம் பக்கத்தொடர்)

ஆஸ்ரேலியாவிலிருந்து வருகைதந்த யோகவின்நோயல் என்ற இலங்கைத் தமிழர் புதுடில்லி விமான நிலையத்தில் இருந்து வெளியேற அனுமதிக்கப்படவில்லை. மாநாட்டில் கலந்து கொள்ளவே இவர் வந்திருந்தார்.

இலங்கையிலிருந்து தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கமும் மாநாட்டில் கலந்துகொண்டார்.

மாநாட்டு ஏற்பாட்டாளரும் சமதாகட்சித் தலைவருமான ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தனது தலைமையுரையில் ஈழத்தமிழர் இரண்டாம் தரப்பிரஜைகள் அல்லர் என நிரூபிப்பதற்காகவே ஆயுதம் ஏந்திப்போராட வேண்டிய நிலை ஏற்பட்டது.'' என்றார். (இ-21)

காணாமற்போன...

(முதலாம் பக்கத் தொடர்)

புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த அனுமதி கோரி பிரஸ்தாப சங்கம் பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பு கொண்டுள்ளது.

சங்க உறுப்பினர்களாக இதுவரை ஆயிரத்து 200 பேர் பதிவு செய்துள்ளனர் என்று அதன் தலைவர் ஈ. பி. நாணயக்கார தெரிவித்தார். (இ-21)

மரண அறிவித்தல்கள்

அரியகுட்டி சபாரட்னம்

ஊரெழுவைச் சேர்ந்த அரியகுட்டி சபாரட்னம் (இளைப்பாறிய தபாலதிபர்) 14-12-1997 அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் லிடியா சபாரட்னம் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மேற்பார்வையாளர்) அவர்களின் அன்புக்கணவரும் திலகராஜ், மகிழ்ராஜ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற அரியரட்னம்மற்றும் இராசமலர், அரியமலர், அறிபுதமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வராஜா, செல்வமலர், செல்வரஞ்சி, செல்வமணி, செல்வானந்தம், செல்வதவராஜ், செல்வஜெயராணி செல்லத்துரை, அழகராஜா ஆகியோரின் மைத்துனரும் சாந்தாதேவி தங்கத்துரை, இராஜகுணநாயகம் விமலாதேவி ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 127, கோயில் வீதி, யாழ்ப் பாணத்திலிருந்து இன்று (15-12-97) பிற்பகல் 3-30 (புதிய நேரம்) மணிக்கு நல்லடக்கத்திற்காக கொட்டடி மெதடிஸ்த சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப் படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
திருமதி லி. செ. சபாரட்னம் (மனைவி)
127, கோயில் வீதி,
யாழ்ப்பாணம். (51853)

கணபதிப்பிள்ளை வல்லிபுரம்

தும்பளை பருத்தித்துறை பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், மன்னார் ஆஸ்பத்திரி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப் பிள்ளை வல்லிபுரம் அவர்கள் 12-12-1997 அன்று மன்னாரில் காலமானார்.

இவர் தங்கம்மாவின் அன்புக் கணவரும், ராசன், குஞ்சன், காலஞ்சென்ற சுபத்திரா, அப்பன், ராணி, பூ. தங்கமலர், யோகேஸ்வரன், கிவி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 13-12-1997 மாலை மன்னாரில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வ. குஞ்சன்
ஆஸ்பத்திரி வீதி,
மன்னார். (கி/2360)

ஆரம்பம் ஆரம்பம் ஆரம்பம்

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு

'மகாநதி'யின்

மாபெரும் சிறப்புத் தள்ளுபடி விற்பனை

10 % முதல் 20 % வரையிலான சிறப்புக்கழிவு

இத்தள்ளுபடி 15—12—1997 தொடக்கம் 31—12—1997 வரை.

இன்றைய தலைமுறையினருக்கேற்ப இறக்குமதி செய்யப்பட்ட திருமணப்பட்டுச்சேலைகள், பட்டு வேட்டிகள்.

ஆடவர்களுக்கேற்ற அழகான டிசைன்களில் T. சேட், சேட், றெடிமேட் றவுசர், சூட்டிங் வகைகள்.

மங்கையர்களுக்கு ஏற்ற அழகான டிசைன்களில் ஸ்கேட் அன் பிளவுஸ் கவுன் சல்வார் கமிஸ், புதிய சாறிவகைகள் (பொற்காலம், பிறின்ரட் டயானா, கொனிக்கா சூயின், அனுமல்சூயின், V. I. P., லண்டன் பசன், கோல்டன் சூயின், றோயல் செலக்சன், லவ் டுடே, பில்லி, சன்மான்சூயின்) மேலும் பல சாறி வகைகள்.

சிறுவர் சிறுமியர்களுக்கு ஏற்ற கண்கவர் சிங்கார ஆடை வகைகள் மற்றும்
பட்டர்சில்க், யோயோ, இன்ரகூலர் வாபிறா, மூன்கிறேப், ரெபோகூலர், டயட்டோப் போன்ற பிறின்ற் பிளேன் துணி வகைகளுக்கும்:

மகாநதி புடைவை அகம்

(முகூர்த்த பட்டுப் புடைவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்)

4, நவீன சந்தை, சாவகச்சேரி,
16, நவீன சந்தை, யாழ்ப்பாணம்

(கி/2337)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்லிக்கேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 861 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பதிவு மனையில் 15-12-97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.